CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# தி கோவை ஹெரால்டு

# THE KOVAI HERALD

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 42 | English & Tamil Weekly | 22.3.2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-

## பல்லடத்தில் அண்ணாமலை: அவினாசியில் எல்.முருகன்





தமிழக சட்டசபைத் தேர்தலில் மத்திய இணைய மைச்சர் எல்.முருகன், நயினார் நாகேந்திரன், அண்ணாமலை, வானதி சீனிவாசன் உள்ளிட்ட பலரும் களமிறங்க இருப்பது உறுதியாகியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக மத்திய இணையமைச்சராக எல்.முருகன் பணியாற்றியுள்ள சூழலில், அவரை மாநில அரசியலுக்கு திரும்ப பாஜக உத்தரவிட்டிருக்கிறது. இதனால், அவருக்கு அவினாசி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுமாம்.

அண்ணாமலை தேர்தலில் போட்டியிட ஆர்வம் காட்டவில்லை என்றாலும், பல்லடம் போட்டியிடுவார் என்று சொல்லப்படுகிறது.

மறுபக்கம் நெல்லை தொகுதியில் நிலவரம் சரியில்லாததால், நயினார் நாகேந்திரன் சாத்தூர் தொகுதிக்கு மாறப்போவதாக கூறப்படுகிறது.

வானதி சீனிவாசனும் கோவை வடக்கு தொகுதி கேட்பதாக சொல்கிறார்கள். இந்த தொகுதியில் அதிமுகவின் அம்மன் கே. அர்ச்சுனன் சிட்டிங் எம்.எல்.ஏவாக உள்ளார். பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கடந்த 2021 சட்டசபை தேர்தலில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்த முறை அவர் கோவை மாவட்டத்தில் ஏதேனும் ஒரு தொகுதியில் களமிறங்க திட்டமிட்டுள்ளார். கடந்த 2024 லோக்சபா தேர்தலில் அண்ணாமலை கோவையில் போட்டியிட்டார். அப்போது அவருக்கு 4.50 லட்சம் ஓட்டுகள் வரை கிடைத்தது. இதனால் அவர் கோவையில் ஏதேனும் ஒரு சட்டசபை தொகுதியில் போட்டியிட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. அதன்படி கோவை வடக்கு, சிங்காநல்லூர், சூலூர், பல்லடம் உள்ளிட்ட தொகுதிகளை அண்ணாமலை ஆர்வம் காட்டுவதாக கூறப்படுகிறது. இதில் ஏதாவது, ஒன்றில் அவர் களமிறங்க முயற்சிக்கிறார்.

## தண்ணீர் விலையும் 'கிர்' அடுத்த ஷாக்...



தமிழகத்தில் பாட்டிலில் அடைக்கப்பட்ட குடிநீர் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழகத்தில் மினரல் வாட்டர் விலையை உயர்த்துவதாக நேற்று (மார்ச் 21) அறிவித்துள்ளது. கோடைக்காலம் தொடங்கியிருக்கும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

20 லிட்டர் வாட்டர் கேன் 5 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. 1 லிட்டர் வாட்டர் பாட்டில் 3 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 8-க்கு விற்கப்பட்ட 200 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ.10-க்கும், ரூ.10-க்கு விற்கப்பட்ட 300 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ.12-க்கும் உயர்த்தப் பட்டுள்ளது.

மூலப்பொருட்களின் விலை சுமார் 40% வரை அதிகரிப்பு, மின் கட்டண உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக பெரிய அளவில் விலையை உயர்த்தாமல் தங்களுக்குள்ளேயே சரிசெய்து வந்தோம்.

தற்போது தவிர்க்கமுடியாத சூழலில் இந்த விலையேற்றம் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஈரான் அமெரிக்கா இஸ்ரேல் போர் காரணமாக பிளாஸ்டிக் போன்ற மூலப்பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், பிளாஸ்டிக் பாட்டில்கள் விலை உயர்ந்துள்ளது. இதனால், பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீர் விலையும் உயர்ந்துள்ளது.

ஏற்கனவே, ப்ரீமியம் பெட்ரோல் விலை ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல் 2026: 'ஆப்சென்ட் ஆகும் வீரர்களால் கலங்கி நிற்கும் அணிகள்

தி கோவை ஹெரால்டு





ஐ.பி.எல் தொடர் வரும் 28ம் தேதி பெங்களூருவில் தொடங்குகிறது. ஆனால். இந்த தொடரில் பல முக்கியமான வீரர்கள் காயம் காரணமாக விளையாட முடியாத சூழலில் உள்ளனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆஸ்திரேலிய வீரர் நாதன் எல்லிஸ் தொடையில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக இந்த சீசன் முழுவதும் விளையாட மாட்டார். சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் கேப்டன் பேட் கம்மின்ஸ் அடி முதுகு காயத்திலிருந்து அவர் இன்னும் குணமடையவில்லை.

இதனால், தொடக்கப் போட்டிகளில் கம்மின்ஸ் விளையாட மாட்டார். இதனால், ஹைதராபாத் அணிக்கு இஷான் கிஷன் தற்காலிக கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இதே அணியின் மற்றொரு வீரரான ஆஸ்திரேலியாவின் ஜாக் எட்வர்ட்சும் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த தொடரில் பங்கேற்கவில்லை.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் இந்திய வேகப்பந்து வீச்சாளரான ஹர்ஷித் ராணாவுக்கு முழங்காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்த சீசன் முழுவதுமே அவர் விளையாட மாட்டார். இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக சாம்கரன் இந்த தொடர் முழுவதுமே ஆடமாட்டார். ராயல் சேலஞ்சர்ஸ் அணியின் ஆஸ்திரேலிய வீரர் ஜோஷ் ஹேசில்வுட் இந்த ஐ.பி.எல் தொடரில் தொடக்க ஆட்டங்களில் பங்கேற்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் ஆஸ்திரேலிய வீரர் மிட்செல் ஸ்டார்க் காயம் காரணமாக வரும் ஐ.பி.எல் தொடரின் தொடக்க ஆட்டங்களில் பங்கேற்கமாட்டார்.

நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளரான லாக்கி பெர்குசன் தொடரின் முதல் கட்ட ஆட்டங்களில் விளையாட மாட்டார். அவருக்கு மகன் பிறந்திருப்பதால், குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுவதற்காக, பெர்குசன் தாய்நாட்டிலேயே தங்கியிருக்கிறார். மும்பை இந்தியன்ஸ் அணியின் அதர்வா அங்கோலேகருக்கு கடந்த ஜனவரி மாதத்தில் நடந்த ரஞ்சி கோப்பை போட்டியின் போது மூட்டு ஜவ்வு பகுதி கிழிந்ததால், இந்த சீசன் முழுவதும் விளையாட முடியாத சூழலில் உள்ளார். லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் இலங்கை அணி வீரர் வனிந்து ஹசரங்காவுக்கு கடந்த டி20 உலகக்கோப்பையின் போது, தொடை தசைநார் கிழிந்தது. இந்த காயத்திலிருந்து வனிந்து ஹசரங்கா இன்னும் குணமடையவில்லை. இதனால், வரும் ஐ.பி.எல் தொடரில் வனிந்து ஹசரங்கா பங்கேற்பது சந்தேகம்.




## வாடகை வீடு - இனிமேல் 2 மாத அட்வான்ஸ்தான் உரிமையாளர்கள் பெற வேண்டும்!



வாடகை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், வாடகைக்கு இருப்போர் மற்றும் உரிமையாளர் இருவரையும் பாதுகாக்கவும், 2026 மாடல் வாடகைச் சட்டத்தில் முக்கிய சீர்திருத்தங்களை அறிவிக்கப்பட்டுள்ளது. டெபாசிட் உச்சவரம்பு நிர்ணயித்தல் முதல் வாடகைதாரர்களைக் காலி செய்யும் நடைமுறைகளை எளிதாக மாற்றுவது வரை, சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வாடகைக்கு இருப்போரிடம் உரிமையாளர் இஷ்டத்திற்கு டெபாசிட் பெறுவார்கள். கோவையில் ,வீட்டிற்கு 6 மாத வாடகையைக் கூட அட்வான்ஸாக பெறுவார்கள். ஆனால், புதிய விதிகளின் கீழ் அட்வான்ஸ் தொகை இரண்டு மாத வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடை போன்ற வணிகப் பகுதிகளுக்கு மட்டும் அதிகபட்சம் ஆறு மாத வாடகையை டெபாசிட் தொகையாக வாங்கிக் கொள்ளலாம். வீடு அல்லது கடையை காலி செய்யும்போது, அன்றைய தினமே பிடித்தம் போக முழுத் தொகையையும் உரிமையாளர்கள் உடனடியாகத் திரும்பச் செலுத்த வேண்டும்

அதோடு, ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே வாடகையை உயர்த்த வேண்டும். மெட்ரோ நகரங்களுக்கு அதிகபட்சம் 10% வரையிலும் பிற பகுதிகளில் சந்தை நிலவரப்படியும் மட்டுமே வாடகையை உயர்த்த வேண்டும்.

இரண்டு மாதங்கள் தொடர்ந்து வாடகை செலுத்தாமல் இருப்பது, சொத்தைத் தவறாகப் பயன்படுத்துவது, வாடகை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கத் தவறுவது போன்ற காரணங்களை கூறி காலி செய்ய முடியும். முதலில் வாடகை ஆணையம், பிறகு, வாடகை நீதிமன்றம், இறுதியில் வாடகைத் தீர்ப்பாயம் என முறையீடு செய்யும் வழிகளும் எளிமையாக்கப் பட்டுள்ளன. அதிகபட்சம் 30 நாட்களில் தீர்வு தரப்பட வேண்டும் என்பதே இதன் இலக்கு.

உரிமையாளர் தானாகச் சென்று, வெளியேற்றும் நடவடிக்கைகளில் நிச்சயம் ஈடுபடக்கூடாது. அதேபோல வாடகை செலுத்தவில்லை என்றாலும் சரி வழக்கு நடந்து கொண்டு இருந்தாலும் சரி குடிநீர், மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை நில உரிமையாளர் துண்டிக்க முடியாது. இது வாடகைதாரர்களுக்கு அடிப்படை பாதுகாப்பை உறுதி செய்கிறது.

வாடகை தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களும் 60 நாட்களுக்குள் மின்னணு முறையில் முத்திரையிடப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படவில்லை என்றால் உரிமையாளர்களுக்கும் உரிமை கிடைக்காது. வாடகைக்கு இருப்போருக்குச் சட்ட பாதுகாப்பு கிடைக்காது.

## பாஜக கூட்டணியில் சசிகலா? தினகரன் சொல்வது என்ன?

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நெருங்கும் நிலையில், டெல்லி சென்றுள்ள அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அமித் ஷாவை சந்திக்க இருப்பதாக கூறப்பட்டது.


ஆனால், நேரம் ஒதுக்கப்படவில்லை. இந்நிலையில், மார்ச் 21ம் தேதி காலை 11.30 மணி அளவில் அமித் ஷாவை, தமிழ்நாடு பாஜக மேலிடப் பொறுப்பாளர் பியூஷ் கோயலுடன் டிடிவி தினகரன் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதில், குக்கர் சின்னத்தில் போட்டியிடுவது, தொகுதிப் பங்கீடு, தேர்தல் களம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அமித் ஷா உடனான சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த டிடிவி தினகரன், "தொகுதி பங்கீடு குறித்து அமித் ஷாவிடம் பேசவில்லை. ஒற்றுமையுடன் தேர்தலை எதிர்கொள்வது குறித்தே பேசினேன். நாங்கள் டெல்லிக்கு வந்தாலே முதலமைச்சர் பயந்து விடுகிறார். 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ரூ.12 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டிற்கு தேவையான நிதியை எளிமையாக பெற்று தரும் நிலையில் நாங்கள் இருக்கிறோம். எங்கள் கூட்டணி முழுமையடைந்துவிட்டது. சசிகலாவை கூட்டணிக்குள் கொண்டுவரும் எண்ணமில்லை" என்றார்.

இதே போன்று, டெல்லி சென்றுள்ள பாமக தலைவர் அன்புமணியும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்க உள்ளார். டிடிவி தினகரன் மற்றும் அன்புமணி, அமித் ஷாவை சந்தித்த பிறகு, பியூஷ் கோயல் நாளை சென்னை வர இருப்பதாகவும், அதன்பிறகே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# Emotion The Juice of Life

THE KOVAI HERALD



Though modern societies have done a lot to develop the intellect, emotion is still the most intense experience for most people. Their body, their intellect, and their energies are not so intense, but their emotions whether anger, hatred, love, compassion or something else are experientially the most intense.

Thought and emotion are not really different. Thought is dry and logical. Emotion is also rooted in the same logic, but it pretends to be "not logical" to add juice to your life it is just the juicier part of the thought. Otherwise, your life would be dry and not worth living. Emotion is the deception of nature that encourages you to live, because if you go 100% logically at your life, you would have no reason to live. You would then come to the question, "To be or not to be?" Such questions have come because we have given ourselves too much to logic. We have not given ourselves to the experience of life.

When you wake up in the morning tomorrow, think absolutely logically. Don't look at the sunrise, don't look at the birds in the sky, don't think of someone you love, your child's face, or the flowers in the garden. Just think logically. Now, you actually have to get out of bed that is not a small feat. You go to the toilet, brush your teeth, eat, do some work, eat, work, eat, sleep tomorrow morning, same thing over and over again. You have to do this for the next 40, 50 years. Think 100% logically, without looking at your life's experience is it really worth while? Emotion transcends the limitation of simple logic and functions in such a way that it gives you a reason to go on. If you go 100% by thought, there is no reason to live.

So, thought is dry, and emotion has some juice in it, but they are not different. There is no reason why there is so much philosophy about putting the mind and heart together. They are anyway together; they are not separate. Suppose, there is a particular person who you think is wonderful. You will have sweet emotions towards that person. If you think someone else is a terrible person, you will have unpleasant emotions towards that person. You cannot think, "This is a horrible person," and have sweet emotions, and neither can you think, "This is a wonderful person," and have unpleasant emotions towards that person. People talk about the conflict between their head and their heart, but there is actually no conflict. It is just that emotions have a certain drag time. They have their own momentum.

Let's say you always thought of someone as a wonderful person. You will have built up so much of emotion. If that person does something that you do not appreciate, suddenly your logical mind starts saying, "This is a horrible person." But emotion has a drag time. It cannot switch immediately. It has momentum and has to run its course. The mind is clearly telling you that you should have nothing to do with this person, but the emotion is still running its course because it is the last carriage of the train. Thought is the engine. It has passed, but the last carriage takes some time. So the "emotional you" is also the "thinking you" the way you think is the way you feel. Emotions can be a very powerful force of movement if one knows how to gather them, and at the same time, be fluid with them when necessary. If one is incapable of gathering his emotions when needed, then emotions are just pure madness. Once you are overtaken by your emotion, you do not see anything the way it is; everything gets distorted. Once, a woman who had just lost her husband was seen fanning his grave a fresh mound of earth. People who were passing by saw this and were so touched. "How dedicated she is to her dead husband!" They came to her and said, "We know you lost your husband. Your dedication moves us to tears, but please, it is all right. He is dead." The widow said, "No, I promised my husband that I will not re-marry till the grave is dry." If you are just emotion, you can be a lot of deception.

Emotions have their beauty; they are the juice of life. At the same time, if you get too soaked in this juice you will lose all your sense. Gautama the Buddha went to the extent of saying that a dry soul is the wisest soul. He is correct. At the same time, if you have sufficient control over your emotion that you can go into it and come out of it by choice, it is a very wonderful dimension.

## Skill Centre Launched in Udumalpet to Boost Youth Employment



The S.K.P. Sunanda Rammohan Skill Centre was inaugurated in Udumalpet to provide free vocational training and create job opportunities for economically disadvantaged youth.

Established by Dr. M. Rammohan through the Mahalakshmi-Muthuramalingam Foundation, the centre offers courses such as EXIM Executive, Supply Chain Associate, and Warehouse Associate for youth aged 1827. The training, which lasts 45 to 90 days, is free of cost and aims to prepare candidates for jobs in the logistics sector. The initiative was launched based on the recommendation of Dr. Rajendra Prasad, with support from Dr. V.G. Mohan Prasad, President of the Sri Kannika Parameswari Educational Institution. J.V. Rao, former Anna University professor, serves as advisor, while Rotarian Sairam oversees operations. Gopalan acts as Secretary. Trainers including Ramalingam, Vinoth, Bala, and Gautham are supporting the initiative.

## Postal Voting Facility Announced for Essential and Election Duty Staff on voting day

Arrangements have been made to enable voters engaged in essential services and election duties to cast their votes through postal ballot on the day of the Legislative Assembly election.

District Election Officer Pavan Kumar G. Giriyappanavar stated that the Tamil Nadu Assembly election is scheduled to be held on April 23. In Coimbatore district, postal voting facilities have been arranged across all 10 Assembly constituencies to ensure that eligible voters on duty can exercise their franchise without difficulty.

He further said that coordination officers have been appointed for various departments to facilitate the process. Employees working in essential services such as Southern Railway, All India Radio, Airports, Information and Broadcasting Department, Transport Corporation, Electricity Board, Fire and Rescue Services, Prison Department, and Traffic Police are eligible for postal voting. Eligible voters must submit Form 12D to their respective departmental officers, express their willingness, and provide necessary approvals. They may also be required to furnish supporting documents, if requested, to complete the process.

The initiative aims to ensure maximum voter participation by providing a convenient voting option for those engaged in critical duties on election day.

## Coimbatore Rolls Out 'Smart Street' Model to Protect Students



In a significant step towards improving road safety for students, the Coimbatore City Municipal Corporation has launched an innovative "Tactical Urbanism" project, introducing temporary but impactful street design changes near schools and colleges.

The pilot phase of the project has been implemented on V.K.K. Menon Road in Siddhapudur, where a Corporation High School and Primary School are located. Around 200 metres of the stretch have been redesigned to ensure safer movement, directly benefiting nearly 530 students.

The initiative aims to make roads safer through low-cost, quick, and effective modifications before permanent infrastructure is developed. Plans are underway to expand the project to 10 locations across the city, covering five zones. Key areas identified include Vincent Road, Raja Street near Town Hall, Pioneer Mill Road, and Nehru Nagar. The project is being supported by Design CoLab as the planning consultant, while the Institute for Transportation and Development Policy (ITDP India) is serving as the knowledge partner.

The need for such an initiative is underscored by alarming data from the city traffic police, which recorded 55 child-related road accidents in 2025 alone. A safety audit conducted within a 250-metre radius of schools in December 2025 revealed major gaps such as discontinuous footpaths, lack of signage, absence of zebra crossings, and missing pedestrian signals.

Explaining the changes, ITDP India's senior associate Sanjana said the redesigned street has significantly reduced roadside parking and introduced strict traffic calming measures. Vehicle speeds in school zones have been limited to 20 kmph. Bright road markings now alert drivers, while speed regulation signs have been installed to enhance awareness.

Additionally, dedicated "drop-and-pick-up" zones have been created to ensure that students can safely board and alight from vehicles without disrupting traffic flow.

Once fully implemented across a 4-km stretch, the project is expected to benefit nearly 5,000 students, along with pedestrians and cyclists.


Urban planners and officials view this as a model initiative that could redefine how Indian cities approach road safety—placing students and pedestrians at the centre of street design.

## One Village, Two MLAs: Coimbatore Hamlet Caught Between Boundaries Seeks Relief

In an unusual and complex electoral situation, residents of Ponnandampalayam village in Coimbatore district find themselves living in a place where one village is represented by two MLAs—highlighting a long-standing administrative anomaly that continues to affect daily life.

Located along the Thennampalayam Annur road, Ponnandampalayam is a small settlement with just seven streets and around 300 families. However, what sets it apart is not its size, but the way it is divided. The village falls under two Assembly constituencies—Avinashi and Sulur—and also overlaps with two Parliamentary constituencies, Coimbatore and Nilgiris.

In practical terms, this means that residents of a few streets cast their votes in the Avinashi Assembly constituency, while the majority vote in Sulur. As a result, the village is effectively represented by two MLAs, each responsible for a portion of the same



locality.

Far from being an advantage, this split has created years of confusion and neglect. Villagers say that despite having dual political representation, they continue to struggle for even the most basic amenities. Drinking water shortages, poor road infrastructure, and delays in civic services remain persistent issues.

The problem is further compounded by administrative fragmentation at the local level. The village comes under four different local bodies—Mopperipalayam Town Panchayat and the village panchayats of Kaniyur, Arasur, and Naranapuram. This means residents often have to approach multiple offices for basic services, with each authority passing responsibility to another.

Of the total households, around 200 houses with nearly 650 voters fall under Kaniyur Panchayat, while others are distributed between Arasur and Naranapuram. A small portion of about 30 houses falls under Mopperipalayam Town Panchayat. This division has made governance inefficient and has slowed down development works.

Adding to the complexity, many residents depend on nearby industries and factories for their livelihood, and the village is also home to migrant workers. Despite being part of an economically active region, the lack of coordinated administration has left the area lagging behind in terms of basic infrastructure.

Villagers allege that for more than two decades, they have been raising concerns about their situation, but with little progress. Even fundamental needs like drinking water supply remain unresolved, largely due to the confusion over jurisdiction and accountability.

With the Tamil Nadu Assembly elections approaching, the issue has once again come into focus. Residents are now strongly demanding that the entire village be brought under a single administrative unit—preferably within Kaniyur Panchayat under the Sulur constituency. They believe this will streamline governance, ensure accountability, and finally bring long-overdue development to the area.

For now, Ponnandam palayam remains a striking example of how overlapping political and administrative boundaries can complicate governance. While the village may have two MLAs on paper, its residents continue to wait for one clear solution to their everyday problems.

## Postal Voting Facility for Differently-Abled and Elderly Voters in Coimbatore

The District Collector Pavan Kumar G. Giriyappanavar has announced special arrangements for differently-abled voters and senior citizens aged above 85 years in view of the upcoming Tamil Nadu Legislative Assembly Election 2026.

Following the announcement of the elections by the Election Commission of India, postal voting facilities have been introduced across all 10 Assembly constituencies in Coimbatore district. This initiative is aimed at helping voters with more than 40% disability and those above 85 years of age avoid difficulties in visiting polling booths. To facilitate this process, Booth Level Officers (BLOs) will visit the homes of eligible voters along with the electoral roll and Form 12D to obtain their consent for postal voting. Voters are required to read or have the form read out to them, provide necessary details, submit supporting documents if requested, and sign the form.

Eligible voters may also submit their willingness through BLOs or directly at the office of the Returning Officer by filling and submitting Form 12D on or before April 3, 2026. The District Collector has urged all eligible voters to extend their cooperation to ensure the smooth and fair conduct of the upcoming elections.

## BIS Mandates ISI Certification for Aluminium Cookware; Coimbatore Officials Highlight New Rules

The Bureau of Indian Standards (BIS) has made ISI certification mandatory for aluminium cookware, with officials in Coimbatore emphasizing strict implementation of the new quality norms.

Under the newly introduced IS 1660:2024 standards, all aluminium utensils must meet specific safety and quality requirements. Bhavani, Senior Director and Head of the BIS Coimbatore branch, stated that the move is aimed at ensuring safer cookware for both domestic and commercial use.

As per the guidelines, aluminium utensils must contain at least 99.5% pure aluminium. The standards also include parameters such as thickness, durability, handle strength, and the ability to withstand high



temperatures.

The new regulation will come into force from October 1. After this deadline, manufacturing, importing, selling, or stocking aluminium cookware without the ISI mark will be treated as a legal offence.

BIS Coimbatore officials noted that the measure will help prevent the circulation of substandard products that may pose health risks due to metal contamination in food.

Manufacturers and traders in Coimbatore have been instructed to comply with the new standards and obtain BIS certification before the deadline. Consumers, meanwhile, are advised to ensure the presence of the ISI mark while purchasing aluminium utensils.

Officials added that the move is expected to significantly improve product quality in the market and strengthen consumer safety.

## Centre Imposes Curbs on Extra Charges for Seat Selection in Flights

In a move to make air travel more affordable and transparent, the Central government has imposed restrictions on airlines collecting additional charges from passengers for selecting seats during ticket booking.

According to the new guidelines issued by the Directorate General of Civil Aviation (DGCA), airlines are not allowed to charge extra fees for selecting up to 60 per cent of seats on a flight, including window and front-row seats.

The order also states that no additional charges should be levied on passengers during ticket booking for seat selection. Further, passengers booking tickets under a single reservation number must be allotted adjacent seats.

In addition, airlines have been instructed to provide travel-related information to passengers in their respective mother tongue to ensure better accessibility and understanding.

The DGCA said the new regulations aim to make air travel more passenger-friendly and transparent. Previously, several airlines charged extra fees for preferred seat selection either during booking or web check-in.

The latest move is expected to ensure fair pricing and improve the overall travel experience for passengers.

FOR NEWS Publication
9244317182
04223147962

## திடீரென மும்பை சென்ற விஜய்



தமிழகத்தில் அரசியல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், நடிகர் விஜயின் ஒவ்வொரு நகர்வும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், நேற்று திடீரென நடிகர் விஜய் மும்பை பறந்தது தலைப்புச் செய்தியாக மாறியது . மும்பையில் ஏதும் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, அவர் சென்றாரா? என்றும் யூகிக்கப்பட்டது.

ஆனால், விஜயின் மும்பை பயணம் முற்றிலும் தனிப்பட்ட விஷயம் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர். . திரைப்பட இயக்குநர் அட்லிக்கு மிகவும் நெருக்கமானவர் விஜய். அட்லியின் மனைவியும் டி.வி.சீரியல் தயாரிப்பாளருமான கிருஷ்ணபிரியாவுக்கு வளைகாப்பு விழா மும்பையில் நேற்று நடந்துள்ளது. இதில், பங்கேற்கத்தான் நடிகர் விஜய் மும்பை சென்றுள்ளார். அட்லி தம்பதியையும் வாழ்த்தியும் மகிழ்ந்துள்ளார். இயக்குநர் அட்லி, ராஜா ராணி, நடிகர் விஜய் நடித்த 'தெறி' , 'மெர்சல்' ஆகிய படங்களை இயக்கியவர். பாலிவுட்டில் ஷாருக்கான் நடித்த 'ஜவான்' படத்தையும் இயக்கியுள்ளார். ஜவான் பட வெற்றியை தொடர்ந்து பாலிவுட்டில் அட்லீக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டது. தொடர்ந்து, மும்பையில் 40 கோடி ரூபாய் செலவு செய்து வீடு வாங்கினார். அங்கு, அவருக்கு அலுவலகமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'அடுப்பே வேண்டாம், வயிறு நிறையும்' அசத்தும் 'படையல்' சிவா

தி கோவை ஹெரால்டு

■ K.அபிராமி




ஹோட்டல் உணவு உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கானதுஎன்கிறஎண்ணம் தான் பலரது மனதிலும் உள்ளது. இத்தகையகாலக் கட்டத்தில்,சிலஇளைஞர்கள் பாரம்பரிய உணவுகளை வித்தியாசமான முறையில், அறிமுகப்படுத்தி அசத்துகின்றனர். இந்தரக உணவுகளைபார்த்துமக்கள் ஆச்சரியப்படுத்துவது மட்டுமன்றி இதுபோன்ற உணவுகளை எவ்வளவு விலை கொடுத்தும் சாப்பிடலாம் என்று கருதவும் செய்து விடுகின்றனர்.

அந்த வகையில்,,, கோவை சிங்காநல்லூரில் அடுப்பில்லாமல், எண்ணெய் பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க இயற்கையான முறையில் ஒரு உணவகம் இயங்கிவருகிறது. அதன் பெயர் 'படையல் இயற்கை உணவகம்'. இதுதான், உலகின் முதல் அடுப்பில்லாத உணவகம் ஆகும். இந்த உணவகம் கோவையைச் சேர்ந்த படையல் சிவா என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது.

இங்கு வடை பாயாசத்துடன் முழுமையான மதிய உணவும் வழங்குகின்றனர். அந்த முழு மதிய உணவில் சாதம், சாம்பார், ரசம், காரக்குழம்பு, பொரியல், அவியல் என அனைத்தையும் அடுப்பே இல்லாமல் சமைத்து பரிமாறுகின்றனர். இவர்களின் உணவில் பழங்கள், நாட்டுக் காய்கறிகள்தான் அதிகமாகப் பயன்படுத்துக் கின்றனர்.

மசாலா என்றால் மிளகு, சீரகம் மற்றும் உப்புதான் பிரதானமாக பயன்படுத்துகின்றனர்.


இங்கு தயிர் சாதம் மிகவும் ஸ்பெஷல். இங்கு சாதாரணமாக பாலிலிலிருந்துதயாரிக்கும் தயிரைக் காட்டிலும் தேங்காய் பாலை 12 மணி நேரம்ஊறவைத்துதயிராக்கி அதை தயிர் சாதமாக செய்கின்றனர். அதில், கூடுதல் சுவைக்கு மாதுளை கேரட் போன்றவற்றையும் கலந்து செய்கின்றனர்.

முழுக்க முழுக்க இயற்கையை மட்டுமே நம்பி இந்த உணவகம் இயங்கி வருகிறது. இங்கு சாப்பிடும்போது மனம் நிறைவடைவதாக வாடிக்கையாளர்கள். தெரிவிக்கின்றனர்.

திருமண வீடுகள், விருந்து வீடுகளுக்கும் இந்த ரக உணவுகள் பரிமாறப்படுகிறது. இந்ததொழிலைபெரியஅளவில் கொண்டு சென்றால் மற்ற கமர்ஷியல் உணவகங்களைப் போல் இதிலும் லாபம் பார்க்கலாம் என்கிறார் படையல் சிவா.

## தேர்தல் விதிமீறல்கள் புகார் 'சி-விஜில்' செயலி மூலம் தெரிவிக்கலாம்

### தலைமை தேர்தல் அதிகாரி தகவல்




தேர்தல் காலத்தில் நடைபெறும் விதிமீறல்கள் குறித்து பொதுமக்கள் எளிதில் புகார் அளிக்க 'சி-விஜில்' செயலியை பயன்படுத்தலாம் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

வாக்குக்கு பணம் வழங்குதல் உள்ளிட்ட தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்த தகவல்களை, இந்தியதேர்தல்ஆணையம் அறிமுகப்படுத்திய 'சி-விஜில்' (c-VIGIL) செயலி மூலம் பொதுமக்கள் பதிவு செய்யலாம்.

இந்தச் செயலியை ஸ்மார்ட்போன்பயன்படுத்துபவர்கள் கூகுள் பிளே ஸ்டோர் அல்லது தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

செயலியில் பதிவு செய்யும்போது, பயனர்கள் தங்களது பெயர், கைபேசி எண், முகவரி, மாநிலம், மாவட்டம் மற்றும் பின்கோடு உள்ளிட்ட விவரங்களை வழங்க வேண்டும்.

தேர்தல்விதிமீறல்களில் அரசியல்வாதிகள் அல்லது வேட்பாளர்கள் ஈடுபடுவதை கண்டால், அதனை புகைப்படம் அல்லது வீடியோ ஆதாரத்துடன் செயலியில் பதிவேற்றி புகார் அளிக்கலாம்.

மேலும், புகார் அளிப்பவர்கள் தங்களது அடையாளத்தை வெளியிட விரும்பாவிட்டால், ரகசியமாக வைத்திருக்கவும் இந்தச் செயலியில் வசதி செய்யப்பட்டுள்ளது. புகார் அளிப்பவர்களின் விவரங்கள் முழுமையாக பாதுகாக்கப்படும் என்றும் அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

இந்தச் செயலி மூலம் பெறப்படும் புகார்களுக்கு 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து புகார் அளித்தவரின் கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தகவல் அனுப்பப்படும் என்றும் தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

## சுங்கக் கட்டணம் செலுத்த தவறினால் இரட்டிப்பு அபராதம்: புதிய விதிகள் அமல்




நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்கும் முறையில் புதிய மாற்றங்கள் அமலுக்கு வந்துள்ளன. இதன்படி, உரிய நேரத்தில் சுங்கக் கட்டணத்தை செலுத்தாத வாகன உரிமையாளர்கள் இரட்டிப்பு கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. மேலும், வாகனங்களுக்கு வழங்கப்படும் சில முக்கிய சேவைகளும்தற்காலிகமாக நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் சுங்கக்கட்டணவசூல்பெரும்பாலும் FASTag முறையில் நடைபெற்று வருகிறது. சுங்கச்சாவடிகளில் காத்திருக்கும் நேரத்தை குறைக்கவும், டிஜிட்டல் வசதிகளைமேம்படுத்தவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டில் 98 சதவீதத்திற்கும் அதிகமான வாகனங்கள் FASTag முறையைப் பயன்படுத்தி வருகின்றன.

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. மொத்தம் 1,44,634 கிலோமீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 892 சுங்கச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 77 சுங்கச்சாவடிகள் இயங்கி வருகின்றன.

இதனுடன், வரும் ஏப்ரல் 1 முதல் தமிழ்நாட்டில் உள்ள 66 சுங்கச்சாவடிகளில் 5% முதல் 7% வரை கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கார், ஜீப், வேன் போன்ற வாகனங்களுக்கு ரூ.10 முதல் ரூ.40 வரை மற்றும் லாரி, பேருந்து போன்ற கனரக வாகனங்களுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

மேலும், மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.300 முதல் ரூ.350 வரை உயர்த்தப்பட்டுள்ளது. வருடாந்திர FASTag பாஸ் கட்டணம் ரூ.3000-ல் இருந்து ரூ.3075 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சந்தா முறை வணிக பயன்பாடு இல்லாத வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

புதிய விதிகளின்படி, சுங்கச்சாவடியை கடக்கும் போது ஏதேனும் காரணங்களால் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்தால், அந்தத் தொகையை வசூலிக்க அதிகாரிகள் இ-நோட்டீஸ் அனுப்புவார்கள். இதில் வாகன விவரங்கள், தேதி, இடம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை போன்ற தகவல்கள் இடம்பெறும்.

இந்த இ-நோட்டீஸ் கிடைத்த 72 மணி நேரத்திற்குள் கட்டணம் செலுத்தினால் எந்த அபராதமும் இல்லை. ஆனால், இந்த காலக்கெடு கடந்தால் செலுத்த வேண்டிய தொகை இரட்டிப்பாகும்.

ஒருவேளை தவறாக நோட்டீஸ் வந்தால், வாகன உரிமையாளர்கள் 72 மணி நேரத்திற்குள் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யலாம். அந்த புகாரை அதிகாரிகள் 5 நாட்களுக்குள் தீர்க்க வேண்டும். 20 நாட்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால், அந்த சுங்கக்கட்டணம்தானாகவே ரத்து செய்யப்படும்.

மேலும், இ-நோட்டீஸ் வந்தும் 15 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், அந்த நிலுவைத் தொகை வாஹன் தளத்தில் பதிவு செய்யப்படும். நிலுவைத் தொகை செலுத்தும் வரை வாகன மாற்றம், புதுப்பித்தல் உள்ளிட்ட சேவைகளுக்கு தடை விதிக்கப்படும்.

டிஜிட்டல் முறையில் சுங்கக் கட்டண வசூலை வலுப்படுத்தவும், தடையற்ற சுங்கச் சாவடி முறையை உருவாக்கவும்.

## தூத்துக்குடி மாணவி கொலை வழக்கில் கைதான குற்றவாளி பற்றி அதிர்ச்சித் தகவல்கள்!

தி கோவை ஹெரால்டு

- 50 வயது பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார்.
- 23 வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளன.
- ஆயுள்தண்டனை பெற்றவர் ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.
- சிறையில் இருந்த வெளியே வந்த நாளிலேயே இரு சக்கர வாகனம் ஒன்றை திருடியுள்ளார்.
- திருட்டு வாகனத்திலேயே தினமும் தூத்துக்குடி மகிளா கோர்ட்டுக்கு சென்று கையொப்பமும் போட்டு வந்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளத்தில் இயற்கை உபாதையை கழிக்கச் சென்ற பள்ளி மாணவி, மர்மமான முறையில், கடந்த 10-ம் தேதி கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சிறுமியை கொலை செய்த குற்ற வாளிகளைப் பிடிக்க 10 தனிப் படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடந்துவந்தது.

கடந்த 9 நாட்களாக போலீசார் குற்றவாளியை தேடி வந்தனர். இந்த வழக்கில் உண்மையான குற்றவாளியை மட்டுமே கைது செய்ய வேண்டுமென்பதுமட்டும்தான் திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி சரவணன் மற்றும் தூத்துக்குடி எஸ்.பி மதன் ஆகியோரின் ஒரே இலக்காக இருந்தது. இதனால், ஏராளமான சி.சி.டி.வி கேமராக்கள் ஆய்வு செய்யப்பட்டது.

போன் கால் தம்ப் எனப்படும் அந்த பகுதியில் காட்டிய செல்போன் சிக்னல்களை கொண்டும் குற்றவாளியை பிடிக்க போலீசார் முயன்றனர்.

இந்த நிலையில்தான், பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்ததாக ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியைச் சேர்ந்த மாவீரன் என்ற தர்முனீஸ்வரன் (36) என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.



விசாணையில் தர்மமுனீஸ்வரன் பற்றி பல அதிர்ச்சித் தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு, 'கைது செய்யப்பட்ட மாவீரன் என்றதர்மமுனீஸ்வரன்மீது மதுரை, புதுக்கோட்டை, துத்துக்குடி, ராமநாதபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் 23 வழக்குகள் உள்ளன. வீடு புகுந்துதிருட்டு, இருசக்கர வாகனத்திருட்டு, வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட்டு வந்துள்ளார். கொடூர மனம் படைத்த மனிதனாக ஊருக்குள் வலம் வந்து கொண்டிருந்துள்ளார். இவரின், கொடூரச் செயலுக்கு 50 வயது பெண் ஒருவரும் 6 ஆண்டுகளுக்கு முன்பு, பலியாகியுள்ளார். கடந்த 2020ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் 50 வயது பெண் ஒருவர் வயலில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அந்த பெண்ணை முனீஸ்வரன் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார். இந்த வழக்கில் முனீஸ்வரனை கைது செய்து எட்டயபுரம் போலீசார் சிறையில் அடைத்தனர். கடந்த 2024ம் ஆண்டு இந்தவழக்கில், தர்மமுனீஸ்வரன் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தொடர்ந்து, மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஜாமீன் கேட்டுமனு செய்திருந்தார்.

உயர்நீதிமன்றம் தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் தினமும் ஆஜராகி கையொப்பமிட வேண்டுமென்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கியது.

இதையடுத்து, 2025-ம் ஆண்டு டிசம்பர் 18ம் தேதி மதுரை சிறையை விட்டு தர்மமுனீஸ்வரன் வெளியே வந்தார். சிறையை விட்டு வெளியே வந்த அதே நாளில் ராமநாதபுரம் மாவட்டம் பார்த்தினூர் பகுதியில் இரு சக்கர வாகனம் ஒன்றையும் அவர் திருடியுள்ளார். பின்னர், வாகனத்தின் பதிவு எண்ணை மாற்றி ஓட்டத் தொடங்கியுள்ளார். இந்த திருட்டு வாகனத்திலேயே தினமும் தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்துக்கு சென்றுகையொப்பமிட்டும் வந்துள்ளார். அப்படி, போகும்போதுதான் விளாத்திக்குளம் பகுதியில் மாலை நேரத்தில் பெண்கள் இயற்கை உபாதையை கழிக்க முட்புதர் பக்கம் ஒதுங்குவதை பாரத்துள்ளார்.



▶ நெல்லை சரக டி.ஐ.ஜி சரவணன்.

இப்போது, தர்மமுனீஸ்வரனுக்குள் மீண்டும் கொடூர எண்ணம் துளிர்க்க தொடங்குகிறது. 4,5 நாட்கள் மாலை நேரத்தில் அந்த பகுதியை தொடர்ந்து கண்காணிக்கிறார். இந்த சமயத்தில், சிறுமி வந்து போவதையும் பார்த்துள்ளார்.

அப்படி, 10-ம் தேதி சிறுமி வந்த போது, பின்னாலேயே சென்று கட்டையால் மாணவியின் தலையில் ஓங்கி அடிக்க, அவர் மயக்கமடைந்து விடுகிறார்.

பின்னர், சிறுமியை முட்புதருக்குள் தூக்கிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்து கொலைசெய்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் தப்பி விடுகிறார். அப்போது, அருகேயுள்ள காற்றாலை நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சி.சி.டி.வி கேமராவில்தான் அவர் சிக்கியுள்ளார். இந்த சி.சி.டி.வி பதிவுதான் திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி சரவணனுக்கு முக்கிய துப்பாக அமைந்தது. இதைக் கொண்டுதான் குற்றவாளியை போலீசார் நெருங்கி தட்டி தூக்கினர். கைது செய்யப்பட்ட தர்மமுனீஸ்வரன் பெரும்பாலும் இருள் கவ்வும் நேரத்தில்தான் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## லண்டன் போனாலும் மாறாத இந்தியர்கள் குணம் நீதிமன்ற அதிரடியால் கலக்கம்!

லண்டனில் குட்கா போட்டு விட்டு துப்பிய இரு இந்தியர்களுக்கு 1.72 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வட இந்தியாவில் பான்மசலா, குட்கா போன்றவற்றை சாப்பிட்டு விட்டு கண்ட இடத்தில் எச்சில் துப்பி வைப்பது வாடிக்கையாக இருந்து வருகிறது.

கடந்த ஆண்டு, அக்டோபர் மாதத்தில் பீகாரில் புதியதாக மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது. ரயில் சேவை தொடங்கிய இரு நாட்களுக்குள் பல மெட்ரோ ரயில் நிலையங்களில் பான் மசாலா சாப்பிட்டுவிட்டு எச்சில் துப்பி வைக்கப்பட்டிருந்த புகைப்படங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் இந்தியர்கள் பொது இடங்களில் இது போன்று அநாகரீகமாக நடந்து கொள்வதாக கூறப்படுகிறது. லண்டன் நகரில் அக்ஷித் குமார் என்ற இளைஞர் 2025ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கிங்ஸ்பியூரி ரயில் நிலையம் அருகே குட்கா சாப்பிட்டுவிட்டு, பொது இடத்தில் எச்சில் துப்பியுள்ளார். அதே போல, ஹிதேஸ் பட்டேல் என்ற இளைஞர் வெம்ப்ளி ஹில் சாலையில் பொது இடத்தில் குட்கா போட்டு விட்டு எச்சில் துப்பியுள்ளார். இதை கண்டுபிடித்த லண்டன் மாநகராட்சி அதிகாரிகள் இருவருக்கும் தலா 100 பவுண்டு (ரூ.12, 371) அபராதம் விதித்தனர். இருவரும் வடமேற்கு லண்டன் மாஜிஸ்திரேட் முன்பு, ஆஜராகி அபராதத்தை செலுத்த வேண்டும். ஆனால், இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகி அபராதத்தை செலுத்தவில்லை. இதையடுத்து இருவருக்கும் 1,391 பவுண்டு (ரூ.1.72 லட்சம்) பெனால்டியாக விதிக்கப்பட்டது.

லண்டன் நகரில் பொது இடங்களில் குட்கா போட்டு விட்டு துப்பிய கரையை நீக்க மட்டும் ஆண்டுக்கு 30 ஆயிரம் பவுண்டு பணம் செலவாகிறது. பொது இடங்களில் எச்சில் துப்பினால், 100 பவுண்டு அபராதம் விதிக்கப்படும் என்று விளம்பர பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன. எனினும் , விதிகளை மீறி தொடர்ந்து இந்தியர்கள் பொது இடங்களில் எச்சில் துப்புவதாக தெரிகிறது.

## சமூக வலைதளங்களில் போலிச் செய்திகள் வாட்ஸ்அப் குழு நிர்வாகிகளுக்கு முழுப் பொறுப்பு

### தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில், சமூக வலைதளங்களில் பரவும் போலிச் செய்திகள் மற்றும் வதந்திகளை கட்டுப்படுத்த தேர்தல் ஆணையம் புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

குறிப்பாக, வாட்ஸ்அப் குழுக்களில் பகிரப்படும் சர்ச்சைக்குரிய பதிவுகள், மத உணர்வுகளைத் தூண்டும் கருத்துக்கள் மற்றும் தேர்தல் விதிமுறைகளை மீறும் தகவல்களுக்கு அந்தக் குழு நிர்வாகிகளே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்காணிக்க மாவட்ட வாரியாக சிறப்புச் சமூக வலைதள கண்காணிப்பு பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் நிலையில், வேட்பாளர்கள் குறித்து அவதூறு பரப்புதல் அல்லது வாக்காளர்களுக்குப் பணம், பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதாக தவறான தகவல்களைப் பகிர்ந்தால், குழு நிர்வாகிகள் மீது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குழுவில் உறுப்பினர்கள் தொடர்ந்து தவறான பதிவுகளை வெளியிட்டால், அவர்களை உடனடியாக நீக்க வேண்டும் அல்லது நிர்வாகி மட்டும் செய்தி அனுப்பும் வகையில் அமைப்புகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போலிச் செய்திகள் மற்றும் தேவையற்ற அரசியல் விவாதங்களைத் தவிர்க்க, குழு நிர்வாகிகள் உறுப்பினர்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களை பகிர்வதைத் தவிர்க்க பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவினால் சமூக வலைதளங்களில் அரசியல் கருத்துகளைப் பகிரும் நபர்கள் மத்தியில் கூடுதல் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

# அமராவதி சைனிக் பள்ளியில் வேலை வாய்ப்பு: விண்ணப்பிக்க ரெடியா?

தி கோவை ஹெரால்டு

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகேயுள்ள அமராவதி நகரில் செயல்பட்டு வரும் சைனிக் பள்ளியில் 2026ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் மொத்தம் 17 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் மார்ச் 31, 2026க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த பணியிடங்கள் நேரடி நியமனம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

இந்த ஆட்சேர்ப்பில் நிரப்பப்பட உள்ள பணியிடங்கள்: ஜெனரல் எம்ப்ளாய் (எம்.டி.எஸ்) 13 இடங்கள் பி.இ.எம்/பி.டி.ஐ கம் மேட்ரன் (பெண்) 1 இடம், வார்டு பாய்ஸ் 3 இடங்கள் என மொத்தம் 17 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

பணியிடத்தைப் பொறுத்துதகுதிமாறுபடும்: எம்.டி.எஸ் 10ம் வகுப்பு தேர்ச்சி, மேட்ரன் 12ம் வகுப்பு தேர்ச்சி

வார்டு பாய்ஸ் 10-ம் வகுப்பு தேர்ச்சி, மேலும் பல திறன்கள் (மல்டி-ஸ்கில், ஹவுஸ் கீப்பிங், எலக்ட்ரிக்கல் போன்றவை) இருந்தால் முன்னுரிமைவழங்கப்படும்.

வயது வரம்பு மற்றும் சம்பளம்: வயது : 21 முதல் 50 வயது வரை

அரசு விதிகளின்படி வயதுதளர்வுவழங்கப்படும். எம்.டி.எஸ்: ரூ.18,000 - 56,900, மேட்ரன்: ரூ.25,000 (தொகுப்பூதியம்)

வார்டு பாய்ஸ் : ரூ. 22,000 - 25,000.

எப்படி விண்ணப்பிப்பது?

அதிகாரப்பூர்வ வெப்சைட்டில் இருந்து விண்ணப்பப் படிவம் டவுன்லோட் செய்ய வேண்டும். அதை பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களுடன் அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்

முகவரி: பிரின்சிபால், சைனிக் ஸ்கூல், அமராவதி நகர், திருப்பூர் மாவட்டம் 642102

விண்ணப்பிக்க கடைசி தேதி : மார்ச் 31, 2026. மத்திய அரசு சார்ந்த சைனிக் பள்ளியில் வேலை பெற விரும்பும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு முடித்த இளைஞர்களுக்கு இந்த வேலைவாய்ப்பு ஒரு நல்ல வாய்ப்பாக பார்க்கப்படுகிறது.

# கோவை-திருச்சி 4 வழி பசுமை சாலை பயண நேரம் பாதியாகக் குறையும் வாய்ப்பு

தி கோவை ஹெரால்டு

கோவை-திருச்சி இடையேயான பயணத்தை வேகமாகவும் நெரிசலின்றியும் மாற்றும் நோக்கில், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) 230 கிலோமீட்டர் நீளமுள்ள புதிய பசுமை வழிச்சாலை (Greenfield Highway) திட்டத்தை முன்னெடுத்து, அதற்கான டெண்டர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தற்போது கோவை-திருச்சி நெடுஞ்சாலையில் வாகனநெரிசல், சிக்னல்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளின் வழியாக செல்ல வேண்டிய அவசியம் காரணமாக பயணிகள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலையைத் தொடாமல், முற்றிலும் புதிய வழித்தடத்தில் இந்தப்பசுமைவழிச்சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்க ஆலோசகர்களை நியமிக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் சாலையின் துல்லியமான பாதை, நிலம் கையகப்படுத்தல், செலவுத்திட்டம் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இறுதி செய்யப்படும்.

புதிய 4 வழிச்சாலை, கோயம்புத்தூரின் கிழக்குப் பகுதிகளில் தொடங்கி, சூலூர், பல்லடம், வெள்ளக்கோவில் பகுதிகள் வழியாக கரூரை இணைத்து, அங்கிருந்து குளித்தலை வழியாக திருச்சியை அடையும் வகையில் அமைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதன்மூலம் கோவை, கரூர், திருச்சி ஆகிய மூன்று முக்கிய தொழில் நகரங்கள் ஒரே பொருளாதார வழித்தடமாக இணைக்கப்படவுள்ளன.

இந்தப் பசுமை வழிச்சாலை செயல்பாட்டுக்கு வந்தால், கோவை-திருச்சி இடையேயான பயண நேரம் கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புறபோக்குவரத்து நெரிசலை தவிர்த்து, நேரடியாக வேகமாக பயணம்செய்ய முடிவதால், பயணிகள் நேரச் சேமிப்பும் எரிபொருள் செலவுக் குறைப்பும் அடையவுள்ளனர்.

மேலும், கரூரின் ஜவுளித் தொழில், திருச்சியின் பொறியியல் துறை மற்றும் கோவையின் சிறு, குறு தொழில்கள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய பொருளாதார பாதையாக இது அமையும். சரக்கு போக்குவரத்து எளிதாகும் என்பதால், தொழில் வளர்ச்சிக்கும் இந்தத் திட்டம் பெரும் ஊக்கமாக இருக்கும்.

சர்வதேச தரத்தில் 4 வழிச்சாலையாக அமைக்கப்படவுள்ள இந்த திட்டம், தற்போதைய குறுகலான மற்றும் நெரிசல் மிகுந்த சாலைகளில் ஏற்படும் விபத்துகளை குறைக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில், பசுமை வழிச்சாலை என்பதால், புதிய பாதை விவசாய நிலங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பகுதிகள் வழியாகச் செல்லக்கூடும் என்பதால், நிலம் கையகப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விவாதங்களும் எழ வாய்ப்புள்ளது.

வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரம் ஆகிய இரண்டுக்கும் இடையில் சமநிலை பேணுவது முக்கிய சவாலாக இருக்கும் என நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

டெண்டர் செயல்முறை நிறைவடைந்ததும், தேர்வு செய்யப்படும் ஆலோசகர்கள் அடுத்த சில மாதங்களில் திட்டத்தின் முழுமையான விவரங்களைத் தயாரிக்க உள்ளனர்.

இந்தப் பசுமை வழிச்சாலை, மேற்கு மற்றும் மத்திய தமிழக இணைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவில் எல்பிஜி தட்டுப்பாடு: 2 நிமிடங்களில் சிலிண்டர் வழங்கும் 'எல்பிஜி ஏடிஎம்' அறிமுகம்

தி கோவை ஹெரால்டு




இந்தியாவில் தற்போது எல்பிஜி (LPG) சிலிண்டர் விநியோகம் தொடர்பான பிரச்சனை தீவிரமடைந்துள்ளது. ஈரான் போரின் பின்னணியில் வளைகுடா நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு எல்பிஜி இறக்குமதி பாதிக்கப்பட்டதால், உள்நாட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த சூழலில் பொதுமக்களுக்கு வீட்டு உபயோக சிலிண்டர்கள் கிடைப்பதை உறுதிசெய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்கு வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விநியோகத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் வணிக மற்றும் தொழிற்துறை பயன்பாட்டிற்கான எல்பிஜி விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சிலிண்டர் முன்பதிவு செய்யும் இடைவெளியும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் 25 நாட்களாகவும், கிராமப்புறங்களில் 45 நாட்களாகவும் கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்பு இது 21 நாட்களாக இருந்தது. மத்திய அரசு தட்டுப்பாடு இல்லை என்றும், முன்பதிவு செய்த அனைவருக்கும் சிலிண்டர் கிடைக்கும் என்றும் கூறிவந்தாலும், பலர் 10 நாட்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்து வருகின்றனர்.

இந்த பிரச்சனைக்கு மாற்றுதீர்வாக, இந்தியாவில் முதல் முறையாக 'எல்பிஜி ஏடிஎம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. டெல்லி அருகிலுள்ள குருகிராம் பகுதியில் இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது. பாரத் கேஸ் நிறுவனத்தின் முன்னெடுப்பில் சோனா பகுதியில் இந்த இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த எல்பிஜி ஏடிஎம் மூலம், வாடிக்கையாளர்கள் தங்களின் காலி சிலிண்டரை கொண்டுவந்து, கன்ச்யூமர் எண் மற்றும் மொபைல் எண்ணை பதிவு செய்து, ஓடிபி மூலம் சரிபார்த்த பிறகு யுபிஐ வழியாக பணம் செலுத்தினால், 2 நிமிடங்களுக்குள் புதிய சிலிண்டர் பெற்றுக் கொள்ளலாம். இதனால், முன்பதிவு செய்து நாட்களாக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் உடனடி சேவை கிடைக்கிறது.

மேலும், இந்த ஏடிஎம் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது தற்போது ஒரு முன்னோட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், விரைவில் நாடு முழுவதும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த வசதி தற்போது ஃபைபர் பொருளால் செய்யப்பட்ட குறைந்த எடையுடைய சிலிண்டர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இவ்வகை சிலிண்டர்கள் சுமார் 15 கிலோ எடையுடையவை. இதற்கு மாறாக, பாரம்பரிய இரும்பு சிலிண்டர்கள் கேஸ் உட்பட சுமார் 31 கிலோ எடையுடையவை என்பதால், அவற்றை கையாள்வது சிரமமானதாகும்.

வாடிக்கையாளர்கள் தாங்களே எளிதாக கொண்டு வந்து மாற்றிக் கொள்ளும் வசதியை கருத்தில் கொண்டு இந்த புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளதாக பாரத் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், புதிய சிலிண்டர் இணைப்பு பெற விரும்புபவர்களும் இந்த ஏடிஎம் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்பிஜி தட்டுப்பாட்டை சமாளிக்க புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் இந்த முயற்சி, பொதுமக்களுக்கு எளிதான மற்றும் விரைவான சேவையை வழங்கும் முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

# ஈஷா, சத்குருவுக்கு எதிரான கட்டுரைகளை நீக்க நக்கீரன் பத்திரிகைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

ஈஷா அறக்கட்டளை மற்றும் சத்குருவுக்கு எதிராக வெளியிடப்பட்ட அவதூறான வீடியோக்கள் மற்றும் கட்டுரைகளை நீக்கும்படி, நக்கீரன் பத்திரிகைக்கு டெல்லி உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.



இந்த உத்தரவை வரவேற்றுள்ள ஈஷா அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது,

''பொய்யான மற்றும் அவதூறான தகவல்களைப் பரப்புபவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் அவதூறுகளால் ஈஷாவின் நற்பணிகளைத் தடுக்க முடியாது. சத்குரு மற்றும் ஈஷா அறக்கட்டளையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில், எவ்வித அடிப்படை ஆதாரமுமின்றி நக்கீரன் ஊடகம் தொடர்ந்து மிகவும் அவதூறான, ஆபாசமான மற்றும் அருவருக்கத்தக்க வகையிலான செய்திகளை வெளியிட்டு வந்தது. இத்தகைய அவதூறு செய்திகளை நீக்கக் கோரியும், வருங்காலங்களில் இது போன்ற செய்திகளை வெளியிடுவதை தடுக்க கோரியும், ஈஷா அறக்கட்டளை சார்பில் கடந்த 2024-ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் ஈஷா சார்பில் இடைக்கால மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் இந்த வழக்கில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு இருந்த காணொளிகள் மற்றும் கட்டுரைகளையும், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இடமாற்ற மனுவின் போது வெளியிடப்பட்ட அவதூறுகளையும் உடனடியாக நீக்க வேண்டும். இது போன்ற தகவல்களை வெளியிடத் தடை விதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது. அப்போது இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சுப்ரமணியம் பிரசாத், இதன் மீதான உத்தரவை ஒத்திவைத்தார். இதனைத் தொடர்ந்து இன்று வெளியான நீதிமன்ற உத்தரவில், ஈஷா அறக்கட்டளை மற்றும் சத்குரு குறித்து நக்கீரன் வெளியிட்ட சர்ச்சைக்குரிய வீடியோக்கள் மற்றும் கட்டுரைகளை நீக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.'

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முனையடுவார் நாயனார்: போர்வீரனாக இருந்து பக்தியில் உயர்ந்த நாயன்மார்



தி கோவை ஹெரால்டு

முனையடுவார் நாயனார் பண்டைய சோழவள நாட்டில் அமைந்திருந்த திருநீடூர் என்னும் திருத்தலத்தில் வேளாள குலத்தில் அவதரித்தார். வீரத்திலும், விவேகத்திலும் சிறந்து விளங்கிய இவர், சிறு வயதிலிருந்தே போர்திறமையால் புகழ்பெற்றவர்.

அந்தக் காலத்தில், மன்னர்களுக்கிடையே போர் நடைபெறும் போது, தனிப்படை அமைத்து உதவிக்குச் செல்லும் வீரர்களுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. அந்த வரிசையில், முனையடுவார் நாயனார் தம்முடன் பல வீரர்களை இணைத்து ஒரு வலுவான படையை உருவாக்கினார். தங்களை நாடி வந்த மன்னர்களுக்கு உதவியாக போரில் கலந்து கொண்டு, அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தார்.

பல போர்களில் எதிரிகளை வென்றதால், "முனை அடுதல்" (போர்முனையில் எதிரிகளை வெல்வது) என்ற பொருளில், அவருக்கு "முனையடுவார்" என்ற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயரே பின்னர் அவரின் அடையாளமாக நிலைத்தது.

போர்வீரராக இருந்தாலும், சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவர் முனையடுவார் நாயனார். போரில் வெற்றி பெற்று பெற்ற செல்வங்கள் அனைத்தையும் அவர் தனக்காகச் சேமிக்காமல், சிவன் கோயில்களின் திருப்பணிகளுக்கும், சிவனடியார்களின் சேவைக்கும் அர்ப்பணித்தார்.

அவரது இல்லம் எப்போதும் சிவபக்தர்களால் நிரம்பியிருந்தது. அவர்களை அன்புடன் வரவேற்று, அறுசுவை உணவளித்து, தேவையான அனைத்தையும் வழங்குவது அவரது வாழ்வின் முக்கிய பணியாக இருந்தது. பக்தி, தானம், சேவை ஆகியவற்றில் உயர்ந்த நிலையை அடைந்த அவர், பல ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, இறுதியில் சிவபெருமானின் அருளால் சிவலோகத்தில் நிலையான இடத்தை பெற்றார்.

முனையடுவார் நாயனார் வாழ்க்கை, வீரத்துக்கும் பக்திக்கும் இடையே சமநிலையை உருவாக்கிய சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

# செனகல் அணியிடம் இருந்து ஆப்ரிக்க கோப்பை பறிப்பு... அதிர்ச்சியில் ரசிகர்கள்!

கடந்த ஜனவரி 18ம் தேதி ஆப்ரிக்க கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டம் மொராக்கோவின் ரபாத் நகரில் நடந்தது. செனகல் மற்றும் மொராக்கோ அணிகள் இறுதி ஆட்டத்தில் மோதின. இந்த ஆட்டத்தின்போது, நடுவர்கள் தவறான தீர்ப்பு வழங்கியதாக கூறி அடிக்கடி இரு அணி வீரர்களும் மோதிக் கொண்டனர். செனகல் அணியின் ரசிகர்களும் மைதானத்தில் போலீசாருடன் மோதலில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் நடுவர் மொராக்கோ அணிக்கு சாதகமாக பெனால்டி வழங்கியதால், செனகல் அணி வீரர்கள் களத்தை விட்டு வெளியேறினர்.

செனகல் அணியின் கேப்டன் சாடியோ மானே மட்டுமே களத்தில் இருந்தார். கிட்டத்தட்ட 14 நிமிடங்கள் செனகல் வீரர்கள் களத்தில் இல்லை. பின்னர், சமாதானமாகி செனகல் வீரர்கள் மீண்டும் களத்துக்கு திரும்பினர். தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது. 90 நிமிட ஆட்டமும் கோல் இல்லாமல் சமனில் முடிந்தது. இதனால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில், ஒரு கோல் அடித்து செனகல் அணி கோப்பையை இரண்டாவது முறையாக கைப்பற்றியது. போட்டி முடிந்ததும், செனகல் அணியின் பயிற்சியாளர் மற்றும் ஒரு சில வீரர்களுக்கு ஆப்ரிக்க கால்பந்து கூட்டமைப்பு தடை விதித்தது.

இந்த நிலையில், ஆப்ரிக்க கால்பந்து கூட்டமைப்பின் நிர்வாக கூட்டத்தில் செனகல் அணியின் ஒழுங்கின்மை குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் செனகல் அணியிடம் இருந்து கோப்பை பறிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதோடு, இறுதிப் போட்டியில் மொராக்கோ அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை வென்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்ரிக்க கால்பந்து கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை, செனகல் நாட்டில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆப்ரிக்க கால்பந்து சங்கத்தின் முடிவை எதிர்த்து, சுவிட்சர்லாந்திலுள்ள சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்போவதாக செனகல் கால்பந்து சங்கம் அறிவித்துள்ளது.

# 19 வயது மணமகளுக்கு 5 கிலோ தங்கம், ரோல்ஸ் ராய்ஸ் கார் பரிசளித்த 70 வயது ஷேக் மாப்பிள்ளை

சவுதி அரேபியாவில் 70 வயதான கோடீஸ்வர ஷேக் ஒருவர், தன்னை விட 51 வயது குறைவான 19 வயது இளம்பெண்ணை திருமணம் செய்துகொண்டதாகக் கூறப்படும் சம்பவம் உலகளவில் பேசுபொருளாகியுள்ளது. வயதுவித்தியாசம் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள நிலையில், அந்த திருமணத்தில் மணமகன் வழங்கிய ஆடம்பர பரிசுகள் சமூக வலைதளங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.



திருமண விழாவில், மணமகன் தனது இளம் மனைவிக்கு சுமார் 5 கிலோ தங்கம் மற்றும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள அதிநவீன 'Rolls-Royce' சொகுசு காரை பரிசாக வழங்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த ஆடம்பரமான நிகழ்வின் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் காட்டுத்தீ போல பரவி வருகின்றன.

வைரலாகும் வீடியோவில், மணப்பெண் மகிழ்ச்சியுடன் மணமகனின் கையை பிடித்துக் கொண்டு வரும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதை பார்த்த நெட்டிசன்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். "இது காதலுக்காக நடந்த திருமணம் அல்ல; பணத்திற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒன்று" என சிலர் விமர்சிக்க, "இன்றைய சூழலில் எதிர்காலப் பாதுகாப்புக்காக இப்படியான முடிவுகள் எடுக்கப்படுவது தவறல்ல" என மற்றொரு தரப்பினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையில், இந்த வீடியோவின் நம்பகத்தன்மை குறித்தும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. சமீப காலங்களில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்படும் வீடியோக்கள் உண்மை போலவே தோன்றுவதால், இது கூட அதே வகை 'ஏஐ' உருவாக்கமாக இருக்கலாம் என சிலர் கருதுகின்றனர்.

ஆனால், மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் வயது வித்தியாசம் கொண்ட திருமணங்கள் அவ்வப்போது நடைபெறுவது புதிதல்ல என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எது எப்படியோ, இந்தச் சம்பவம் தற்போது இணையத்தில் ஹாட் டாபிக்காக மாறி, பல்வேறு கோணங்களில் விவாதிக்கப்படுகிறது.

# மீண்டும் பார்முக்கு திரும்பியது எப்படி?

## மனம் திறந்த சஞ்சு சாம்சன்

தி கோவை ஹெரால்டு



சமீபத்தில் நடந்து முடிந்த டி20 உலகக் கோப்பையில் இந்திய அணி கோப்பையை வெல்ல சஞ்சு சாம்சன் முக்கிய காரணமாக இருந்தார். இந்த தொடரின் ஆட்ட நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார். 5 ஆட்டங்களில் மட்டுமே விளையாடிய சஞ்சு சார்ம்சன் 321 ரன்களை எடுத்தார். அதோடு, 24 சிக்ஸர்களை இந்த தொடரில்விளாசியிருந்தார். இந்த தொடரில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர் இவர்தான். சஞ்சுவின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக கருதப்பட்ட நிலையில், அட்டகாசமாக விளையாடி மீண்டும் பார்முக்கு திரும்பியுள்ளார். அடுத்து தொடங்கவுள்ள ஐ.பி. எல் தொடரில் சென்னை அணிக்காக சஞ்சு சாம்சன் விளையாடவுள்ளார். இதனால், அவர் மீது எதிர்பார்ப்பு எகிறியுள்ளது.

வரும் மார்ச் 28ம் தேதி 2026ம் ஆண்டு ஐ.பி.எல். சீசன் தொடங்குகிறது. இதற்காக, சென்னை அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. சென்னையில்தோனியுடன்இணைந்து சஞ்சுசாம்சனும்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், மீண்டும் பார்முக்கு திரும்பியது குறித்து சஞ்சு சாம்சன் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறியதாவது,'' உலகக் கோப்பை தொடங்கும் முன், திருவனந்தபுரத்தில் இருந்து நான் கிளம்பிய போது, என் மனதுக்குள் ஒரு கேள்வி எழுந்தது. 'நீ எப்படி மீண்டும் பார்முக்கு திரும்ப போகிறாய்? ' என்று என் மனம் என்னிடத்தில் கேட்டது. தொடர்ந்து, செல்போன் பார்ப்பதை தவிர்த்தேன். இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சோசியல் மீடியாக்களை தவிர்த்தேன்.

எனது மனைவி, நெருங்கிய நண்பர்கள் இந்த தருணத்தில் எனக்கு ஊக்கமளித்தனர். கிரிக்கெட்டில் மட்டுமே கவனம் செலுத்த தொடங்கினேன்.

சச்சின் தெண்டுல்கருடன் தொடர்ந்து ஆலோசனைகள் பெற்றேன்.

இது, எனக்கு மிகுந்த உதவிக்கரமாக இருந்தது. டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு முன்னதாக கூட சச்சின் எனக்கு போன் செய்து 'டிப்ஸ்' கொடுத்தார். நிச்சயமாக நான் பார்முக்கு வர சச்சின் கொடுத்த அறிவுரைகளே உதவியாக இருந்தது.

இப்போது, மற்றொரு ஜாம்பவான் தோனியுடன் கலந்துரையாடுகிறேன். அவரிடத்தில் இருந்து நிறைய கற்றுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு மாதங்கள் அவருடன் சேர்ந்து பயணிப்பதே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவருடன் இருப்பதே ஒரு பாசிடிவான விஷயம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் சென்னை அணி தனது முதன் ஆட்டத்தில் மார்ச் 30ம் தேதி கவுகாத்தி நகரில்ராஜஸ்தான்ராயல்ஸ் அணியைஎதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் விக்கெட் கீப்பர்களான இருவருமே களம் இறக்கப்படுவார்கள்.

# வைரமுத்து இப்படிப்பட்டவரா?

## உண்மையை உடைத்த எழுத்தாளர் வண்ண நிலவன்

தி கோவை ஹெரால்டு



கவிஞர், பாடலாசிரியர் வைரமுத்துவுக்கு மத்திய அரசின் ஞானபீடம் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நவீனதமிழ்எழுத்தாளர்கள், தீவிர இலக்கிய வாசகர்கள் கடுமையான விமர் சனங்களை முன் வைத்துள்ளனர்.

எழுத்தாளர் ஜெயமோகன் தனது சமூகவலைதளபக்கத்தில் எழுதியிருப்பதாவது "கடந்த ஓராண்டாகவே சிலசெய்திகள் என் காதில் விழுந்துகொண்டிருந்தது பாரதிய ஜனதாவின் சிலருடன் வைரமுத்து மிக அணுக்கமாகச் செயல்பட்டு ஞான பீடத்திற்கு மீண்டும் முயல்கிறார் என்று. ஆனால், விசாரித்த போதெல்லாம் அப்படி யில்லை என சிலர் ஆக்ரோஷமாக மறுத்தனர்.

வைரமுத்து ஒரே சமயம் திமுகவுக்கு வேண்டியவர், கருணாநிதியின் நண்பர், மோடி கவிதைகளை மொழியாக்கம் செய்யும் ஆர்.எஸ்.எஸ்.அனுதாபி, பாரதிய ஜனதாவின் கலாச்சாரத்துறை முகவர்களின் அனுதாபி. அது ஒரு தனிக்கலை.

தமிழ்நாட்டில் இந்த தலைமுறையில் அவர் அதில் மாபெரும் நிபுணர்.

இந்திய துணைஜனாதிபதிக்கு ஞானபீடப்பரிசில் பெரும் பங்களிப்புண்டு என அறிந்திருக்கலாம்.

இந்த தேர்தலை ஒட்டியும் ஏதேதோ கணக்குகள் இருந்திருக்கலாம். இந்த ஞானபீட விருது அமைப்பு தமிழ் நவீன இலக்கியத்தின் முகத்தில் காறி உமிழ்ந்தமைக்குச் சமம்.

இந்த அவமதிப்புக்கு தமிழர்களாகிய நாம் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.


ஜெயமோகன் இப்படி காட்டமாக கூறியுருக்கும் நிலையில் எழுத்தாளர் வண்ணநிலவன் வைரமுத்து பற்றி மற்றொரு சம்பவத்தை குறிப்பிட்டு சமூகவலைத் தளத்தில் ஒரு செய்தியை பகிர்ந்துள்ளார். அதில், கூறியிருப்பதாவது, '20 ஆண்டுகளுக்கு முன்பு வைரமுத்து கஷ்டப்பட்டு எனது வீட்டை கண்டுபிடித்து வந்தார். அவரின், கையில் பழங்களும் சில பரிசுப் பொருட்களும் இருந்தன. என்னிடத்தில் வந்த அவர்,' நீங்கள் சாகித்ய அகாடமி விருது குழுவில் இருப்பதாக கேள்விப்பட்டேன்.

எனக்கு உங்கள் ஆசிர்வாதம் வேண்டும்' என பணிவுடன் கூறினார். உடனே, நான் 'அந்த குழுவில் இருப்பவது வண்ணநிலவன் இல்லை. மற்றொரு எழுத்தாளரான வல்லிக்கண்ணன்' என்றேன்.

உடனே, அவர் தான் எடுத்து வந்த பழங்கள், பரிசு பொருட்களுடன் வீட்டை விட்டு வெளியேறி விட்டார். இதுதான் வைரமுத்து.

விருதுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார். கருணாநிதிக்கு நெருங்கிய நண்பராகவும் இருப்பார். அதே வேளையில், மோடியின் கவிதைகளை மொழியாக்கமும் செய்வார். திமுகவுடனும் இருப்பார். பாரதிய ஜனதாவுடனும் பயணிப்பார். இதற்காக, அவர் வெட்கப்பட மாட்டார்' என்று கூறியுள்ளார்.

# தினமும் 30 நிமிடங்கள் நடந்தால் போதுமாம்... கை மேல் பலன் கிடைக்கும்



நாம் உடலுழைப்பு செலுத்துவதை விட அதிகளவில் அலுவலகப் பணிகளுக்கு செல்லத் தொடங்கிவிட்டோம். குறிப்பாக அலுவலங்களில் நீண்ட நேரம் அமர்ந்து பணியாற்ற வேண்டிய சூழலில் உள்ளோம். அதேபோல உணவுப் பழக்கங்களும் மிக மோசமாக மாறிவிட்டன. இதனால் 40 வயதிலேயே சர்க்கரை நோய், ரத்த அழுத்தப் பிரச்சனைகள் ஏற்படுவதை காண முடிகிறது.

எந்த உடலுழைப்பும் செலுத்த முடியாவிட்டாலும் தினமும் 30 நிமிடங்கள் நடைபயிற்சி செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

30நிமிடங்களுக்குமேல் நடைபயிற்சி செய்தாலும் மேலும் அதிக பலன்களைத் தரும். தினமும் நடைபயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விரிவாக பார்க்கலாம்.

தினமும் நடைபயிற்சி செய்வது இதய நோய் அபாயத்தைக்குறைக்கிறது. இது எண்டோடெலியல் செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது.

எண்டோடெலியல் செல்கள்ரத்த நாளங்களின் உள்மேற்பரப்பில் உள்ளன மற்றும் வாஸ்குலர் தொனி, இரத்த அழுத்தம் மற்றும் பிளேட்லெட் திரட்டலை பராமரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. நடைபயிற்சி ஒட்டுமொத்த இதய செயல்பாடு மற்றும் இதயத் துடிப்புக்கு சிறந்ததாக உள்ளது.

விறுவிறுப்பான நடைபயிற்சி நுரையீரல் செயல்பாடுகளை அதிகரிக்கிறது. நடைபயிற்சி உடலின் ஆக்ஸிஜன் தேவையை அதிகரிக்கிறது, இந்த தேவையை பூர்த்தி செய்ய நுரையீரல் மற்றும் உதரவிதானம் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறது.

நடைபயிற்சிசெய்வதன் மூலம் உடல் முழுவதும் ரத்த ஓட்டம் மேம்படுகிறது. 30 நிமிட நடைபயிற்சி பெண்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை 20 சதவீதம் குறைக்கிறது. வேகத்தை அதிகரிப்பது ஆபத்தை 40 சதவீதம் குறைக்கிறது.

உங்கள் எடையை சரியாக பராமரிக்க விரும்பினால், நடைப்பயணத்தை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது. உங்கள் எடை இழப்பு திட்டத்தில் இதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். 30 நிமிட விறுவிறுப்பான நடைபயிற்சி 200 கலோரிகளை எரிக்கிறது, இது கலோரி பற்றாக்குறையை அடைவதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பெரும்பாலான மூட்டுகளில் உள்ள குருத்தெலும்பு நேரடி இரத்த விநியோகத்தைப் பெறுவதில்லை. எனவே, அதுமூட்டுதிரவத்திலிருந்து ஊட்டச்சத்து மற்றும் ஆக்ஸிஜனைப் பெற வேண்டும்.

நடைபயிற்சியின்போது குருத்தெலும்புக்கு இவை வழங்கப்படுகிறது. நடைபயிற்சி எலும்பு இழப்பைக் குறைத்து எலும்பு வலிமையைப் பராமரிக்கிறது.30நிமிடங்கள் விறுவிறுப்பானநடைபயிற்சி உங்கள் மனநிலை, மன ஆரோக்கியம் மற்றும் தூக்கத்தின் தரத்தைமேம்படுத்துகிறது. உங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

# 900 கோல்கள் உலக சாதனை படைத்த லியோனல் மெஸ்ஸி



கால்பந்து உலகின் முடிசூடா மன்னனாகத் திகழும் லியோனல் மெஸ்ஸி, மிகக் குறைந்த போட்டிகளில் 900 கோல்கள் அடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இன்டர் மியாமி அணிக்காக விளையாடி வரும் 38 வயதான மெஸ்ஸி, கான்காகேஃப் சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் நாஷ்வில் அணிக்கு எதிரான போட்டியில் இந்த மைல்கல்லை எட்டினார். போட்டியின் 7வது நிமிடத்திலேயே எதிரணி வீரர்கள் சூழ்ந்திருந்த நிலையிலும் குறுகிய இடத்தை பயன்படுத்தி அவர் அடித்த அதிரடி கோல் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியது.

இந்தச் சாதனையின் மூலம் தனது நீண்டநாள் போட்டியாளரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சாதனையை மெஸ்ஸி முறியடித்துள்ளார். ரொனால்டோ 1,236 போட்டிகளில் 900 கோல்கள் அடித்திருந்த நிலையில், மெஸ்ஸி வெறும் 1,142 போட்டிகளில் இந்த இலக்கை எட்டி 'அதிவேக வீரர்' என்ற பெருமையைப் பெற்றுள்ளார். மேலும், 39 வயதில் ரொனால்டோ எட்டிய சாதனையை, மெஸ்ஸி 38 வயதிலேயே எட்டி 'குறைந்த வயதில் 900 கோல்கள்' அடித்த வீரர் என்ற சாதனையையும் தன்வசப்படுத்தியுள்ளார்.

பார்சிலோனா அணிக்காக 672 கோல்கள் மற்றும் அர்ஜென்டினா தேசிய அணிக்காக 115 கோல்கள் அடித்துள்ள மெஸ்ஸிக்கு உலகம் முழுவதும் இருந்து வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

தற்போது இன்டர் மியாமி அணியை முன்னேற்றிவரும் மெஸ்ஸி, தனிநபர் சாதனைகளிலும் உச்சத்தை எட்டியுள்ளார். அவரது இந்த சாதனை கால்பந்து ரசிகர்களுக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் நாட்டின் கடைசி அரசி யார்... எங்கே வசிக்கிறார்?



ஈரான் நாட்டில் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் 1979ம் ஆண்டில் அதிகாரத்துக்கு வந்தவர்கள். ஈரான் நாட்டில் 1925ம் ஆண்டு முதல் பகலவி வம்சத்தின் மன்னராட்சி நடந்தது. ஈரான் நாட்டை ஆண்ட கடைசி மன்னர் வம்சம் பகலவி ஆகும். முகமதுரேசாஷாபகலவி அந்த நாட்டின் கடைசி மன்னர் ஆவார். 1979ம் ஆண்டில் நடைபெற்ற ஈரானியப் புரட்சியின் போது, ஈரானில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது. இதனால், மன்னர் முகமது ரேசா ஷா வெளிநாடுகளில் குடும்பத்துடன் தஞ்சமடைந்தார். ஈரானில் ஆட்சியை கைப்பற்றிய புரட்சிப்படையினர், எப்போது வேண்டுமானாலும் தங்களைக் கொல்லலாம் என்று அவர் கருதியதால், ஒரே நாட்டில் நிலையாக அரசியல் தஞ்சமடையவில்லை. எகிப்து, மொராக்கோ, மெக்ஸிகோ, பஹாமாஸ், அமெரிக்கா என்று பல நாடுகளுக்கு அவர் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார். இவரது, மூன்று மனைவிகளில் கடைசி மனைவிதான் ஃபாராபகலவி. இவர்தான் ஈரான் நாட்டின் கடைசி அரசி ஆவார்.

டெஹ்ரான் நகரில் பணக்கார குடும்பத்தில் பிறந்த ஃபாரா, பாரீசில் கட்டடக்கலை பயின்ற போது, ஈரான் மன்னருடன் பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியது. 1959ம் ஆண்டு தனது 21 வயதில் முகமது ரேஷா ஷாவை திருமணமும் செய்து கொண்டார். இந்தத் தம்பதிக்கு நான்கு குழந்தைகள் உண்டு. ஈரானியப் புரட்சியின் போது, கணவருடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டு விட்டது.

ஈரானில் புரட்சி வெடித்த போது, முதலில் ஈரான் மன்னர் தனது மனைவி ஃபாரா மற்றும் குழந்தைகளுடன் எகிப்தில் தஞ்சமடைந்தார்.

பதவியை இழந்த ஒரே ஆண்டில் மன்னரின் உடல்நிலை மோசமடைந்ததால், அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை எடுக்க அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், மீண்டும் எகிப்து திரும்பிய நிலையில், 1980ம் ஆண்டு ஈரான் மன்னர் மரணித்தார்.

1981ம் ஆண்டு ரொனால்ட் ரீகன் அமெரிக்க அதிபராக இருந்த போது, 'ஃபாரா அமெரிக்காவுக்கு வரத் தடையில்லை... நாங்கள் அவரை மனதார வரவேற்கிறாம்' என்று அறிவித்தார். தொடர்ந்து, குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறினார். தனக்கு அரசியல் தஞ்சம் அளித்த ரொனால்ட் ரீகன் மீது அவருக்கு தனிப் பற்று இருந்தது. 2004ம் ஆண்டு ரொனால்ட் ரீகன் மறைந்தபோது, அவரின் இறுதிச்சடங்கிலும் ஃபாரா பங்கேற்றார். தற்போது, 87 வயதாகும் அவர் பாரீஸ் மற்றும் அமெரிக்காவில் மாறி மாறி வசிக்கிறார். அமெரிக்காவில் மேரிலேண்ட் பகுதியில் அவருக்குச் சொந்த வீடும் உள்ளது.

# சர்க்கரை நோயால் உடல் எடை குறைந்ததா...

## நடிகை குஷ்பூ சொல்வது என்ன?



நடிகை குஷ்பூ தமிழ்ப்படங்களில் கோலோச்சியகாலக்கட்டத்தில், 'புசு புசு'வென இருக்கும் நடிகைகளுக்குத்தான் மார்க்கெட் அதிகம். புசு புசுவென்று இருந்த காரணத்தினால், வருஷம் 16 படத்தில் அறிமுகமான நடிகை குஷ்பூ, தமிழ்ரசிகர்கள் மனதில் எளிதாக இடம்பிடித்துவிட்டார். புசு புசுவென இருந்த அவர், தற்போது மிகவும் உடல் மெலிந்து ஸ்லிம் பேபியாக மாறியுள்ளார். பலரும் சர்க்கரை வியாதி காரணமாக அவர் உடல் எடை மெலிந்து காணப்படுவதாககூறிவந்தனர்.

இந்த நிலையில், தனது உடலமைப்பில் ஏற்பட்ட மாற்றம் குறித்து நடிகை குஷ்பூ மனம் திறந்து பேசியுள்ளார்.

'தற்போது, எனக்கு 55 வயதாகிறது. ஆனால், சர்க்கரை நோயோ அல்லது ரத்த அழுத்த நோயோ எனக்கு கிடையாது. எனது , தாயாருக்கு சர்க்கரை நோய் இருந்தது. ஆனால், எனக்கு இல்லை. 'அண்ணாத்தே' படத்தில் ரஜினிகாந்துடன் நடித்த போது, நான் 98 கிலோ எடை இருந்தேன். எனது முகத்தை கண்ணாடியில் பார்த்தால் கூட பயமாக இருக்கும். கடுமையான மூட்டு வலி இருந்தது.

இதனால், மாடிப்படி ஏறுவது கூட சிரமமாக இருந்தது. இந்த சமயத்தில் ,எனது டாக்டர் , 'நீங்கள் எடையை குறைந்தால் மட்டுமே மூட்டு வலியில் இருந்து தப்பிக்க முடியும். அதோடு , வருங்காலத்தில் சர்க்கரை நோயும் வராது' என்று அறிவுரை கூறினார். கோவிட் காலத்தில்தான் எனது எடை குறைப்பு பயணம் தொடங்கியது. எனது மகளும் என்னுடன் சேர்ந்துக் கொண்டார். சப்பாத்தி, பரோட்டா போன்ற குளுட்டன் நிறைந்த உணவுகளை தவிர்த்தோம். தீவிர உணவுக்கட்டுப்பாட்டை கடைபிடித்தோம். கடந்த 4 ஆண்டுகளில் 38 கிலோ எடையை குறைத்துள்ளேன். இப்போது , முற்றிலும் எடை குறைந்து எனது வயதுக்கேற்ற உருவத்துக்கு மாறியுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# குவைத்தில் ஈராக் செய்த கொடூரம் காஷ்மீரில் 'கருப்புபனி' பொழிந்த பின்னணி!

தி கோவை ஹெரால்டு

கடந்த 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2-ஆம் தேதி, சதாம் உசேன் தலைமையிலான ஈராக் படைகள், எண்ணெய் வளம் நிறைந்த குவைத்தை ஆக்கிரமித்தது. பலமான ஈராக் படையினரை எதிர்த்து குவைத்தால் எதிர்த்து போரிட முடியவில்லை. எளிதாக வீழ்ந்து விட்டது. தொடர்ந்து, குவைத்தை மீட்க அமெரிக்கா தலைமையிலான 42 நாடுகள் போரில் குதித்தன. போரின் முடிவில் ஈராக் தோற்கடிக்கப்பட, இந்த சமயத்தில் ஈராக் அதிபர் சதாம் உசேன் மிக மோசமான ஒரு முடிவை எடுத்தார். இதனால், உலக சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டது

அதாவது, தனது படைகளுக்கு குவைத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பு, அந்த நாட்டின் எண்ணெய் உற்பத்தித் திறனை முற்றிலும் அழித்துவிட வேண்டும் என்று சதாம் உத்தரவிட்டார்.

இதனால், 1991ம் ஆண்டுப்பிப்ரவரி மாதத்தில் அந்த நாட்டில் இருந்த 750-க்கும் மேற்பட்ட எண்ணெய்கிணறுகளுக்குத் ஈராக் படைகள் தீ வைத்தன. இதனால், தினமும் 4 முதல் 6 மில்லியன் பேரல் எண்ணெய் எரிந்து வீணானது.

இந்த எண்ணெய் கிணறுகள் பல மாதங்களாக, விடாமல் எரிந்தன. இதனால், வளைகுடாப் பகுதியில் வானத்தில் அடர்த்தியான கருப்புப் புகை பரவி, மக்களை மூச்சுத்திணறச் செய்தது. பல நாடுகள் சேர்ந்து தீயை அணைக்கப் போராடின. கிட்டத்தட்ட 9 மாதங்கள் போராடி தீ அணைக்கப்பட்டது. தீ காரணமாகக் குவைத் மற்றும் சவூதி அரேபியா நாடுகளில் காற்று மாசுபாட்டின் அளவு அபாயகரமான நிலையை எட்டியது. பாரசீக வளைகுடா பகுதியில் கடல் வாழ் உயிரினங்கள் செத்து மிதந்தன. ஈராக் அதிபரின் வன்மம் நிறைந்த இந்த செயலால், உலகச் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

வளைகுடாவில் படர்ந்த கரும்புகை ஆயிரக் கணக்கான கிலோமீட்டர் தூரம் பயணித்தன. இதன் எதிரொலியாகக் குவைத்தில் இருந்து 2,700 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் இமயமலை பகுதியில் "கருப்புப் பனி" பொழியத் தொடங்கியது. இந்ததகவலை, அப்போதைய அப்போதைய இந்தியச் சுற்றுச்சூழல்துறை இணை அமைச்சர் கமல் நாத்தும் உறுதி செய்திருந்தார்.

தற்போது, 35 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் மத்திய கிழக்கில் உக்கிரமான போர் நடந்து வருகிறது. பல எண்ணெய் கிணறுகள் எரிந்து வருகின்றன. இதனால், மீண்டும் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

# அடுக்குமாடி குடியிருப்புகளுக்குள்ளேயே வாக்குச்சாவடி

தேர்தல் ஆணையத்தின் 4 முக்கிய அறிவிப்புகள்: அரசியல் விளம்பரம், செயற்கை நுண்ணறிவு, அலுவலர் ஊதியம், புதிய வாக்குச்சாவடிகள் முழு விவரம்

இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல் செயல்முறையை மேலும் வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் நடத்தும் நோக்கில் நான்கு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களை வெளியிடும் அனைத்து கட்சிகளும், வேட்பாளர்களும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவான MCMC-இன் முன் அனுமதி பெற வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் 3 நாட்களுக்கு முன்பும், அங்கீகரிக்கப்படாதவர்கள் 7 நாட்களுக்கு முன்பும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் 48 மணி நேரத்தில் பரிசீலிக்கப்படும்.




செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் போலி காட்சிகள் தொடர்பான சவால்களை கருத்தில் கொண்டு, புதிய வழிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.


இத்தகைய உள்ளடக்கங்களில் “செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்டது” போன்ற தெளிவான குறிப்புகள் கட்டாயம் இருக்கவேண்டும். ஒருவரின் அனுமதி இன்றி அவரின் குரல் அல்லது உருவத்தை தவறாக பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

புகார் அளிக்கப்பட்டால் 3 மணி நேரத்திற்குள் அவை நீக்கப்படும்.

வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் ஊதியம் ரூ.6,000-ல் இருந்து ரூ.12,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 75,037 அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். 20252026 ஆண்டிற்காக ரூ.99.81 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக ரூ.2,000 ஊக்கத்தொகையும் வழங்கப்படும். நகர்ப்புறங்களில் வாக்காளர் பங்கேற்பை அதிகரிக்க, அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீட்டு வளாகங்களுக்குள் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2026 சிறப்பு திருத்தத்தின் போது 14 புதிய வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார்.

# ஹோர்முஸ் நீரிணை எண்ணெய்க்கு மட்டுமல்ல... இன்டர்நெட்டுக்கும் முக்கியம்!



கடந்த மாதம் 28ம் தேதி ஈரான் நாட்டின் உச்சபட்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்ட நிலையில் இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையேயான மோதல்கள் தீவிரமடைந்துள்ளது ஈரானும் விட்டுக் கொடுக்காமல் தன்னை சுற்றியுள்ள வளைகுடா நாடுகளை குறி வைத்து தாக்கி வருகிறது. மேலும், ஹோர்முஸ் நீரிணை வழியேயான கப்பல் போக்குவரத்தை தடைசெய்வதாக ஈரான் அறிவித்தது. பல கப்பல்கள் போக்குவரத்து அனுமதிக்காக காத்து நிற்கின்றன. இதனால், சர்வதேச எண்ணெய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, அமெரிக்கா அல்லது இஸ்ரேலை ஆதரிக்காத நாடுகளைச் சேர்ந்த வர்த்தகக் கப்பல்களை ஹோர்முஸ் நீரிணை வழியாக செல்ல ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படை அனுமதிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியக் கப்பல்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எண்ணெய் போக்குவரத்துக்கு மட்டும் ஹோர்முஸ் நீரிணை முக்கிய வழியல்ல. உலகளாவிய இன்டர்நெட் இணைப்புக்கும் இந்த நீரினை முக்கிய பாதையாக உள்ளது. இந்த கடலுக்கடியில் ஃபைபர்-ஆப்டிக் கேபிள்களும் பதிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவுக்கு இந்த கேபிள்கள் கடலுக்கடியில் செல்கின்றன. வீடியோ அழைப்புகள், மின்னஞ்சல்கள், வங்கிப் பரிமாற்றங்கள், செயற்கை நுண்ணறிவு சேவை வரை இவை வழங்குகின்றன. இந்தியாவை உலக நாடுகளுடன் இணைப்பதும் இந்த கேபிள்கள்தான்.

ஹோர்முஸ் நீரிணையின் ஆழம் பல இடங்களில் சுமார் 200 அடி மட்டும்தான்.

அதனால், மின்வடங்கள் ஆழம் குறைந்த நீரிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதனால், ஈரான் எளிதாக இந்த மின்வடங்களை அழித்துவிட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி செய்தால், வளைகுடா நாடுகள், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் இண்டர்நெட் சேவை, போன் சேவை வெகுவாக பாதிக்கப்படும். இதனால், அமெரிக்க போர்க்கப்பல்கள் இந்த பகுதியை கண்கொத்தி பாம்பாக கண்காணித்து வருகின்றன. இதுவரை, இந்த மின்வடங்களை ஈரான் தகர்க்க முயலவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

## தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகமது ரஃபி ரம்ஜான் வாழ்த்து



தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினரான ஜே. முகமது ரஃபி வெளியிட்டுள்ள ரம்ஜான் வாழ்த்தில் கூறியிருப்பதாவது, ‘‘உலகில் வாழும் அனைத்து இஸ்லாமிய மக்களுக்கும் ஈதுல் பித்ர் என்னும் ரம்ஜான் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இறைவனின் கட்டளையை ஏற்று பகலெல்லாம் பசித்திருந்து, இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை நின்று வணங்கி, ஏழ்மை இல்லா உலகத்தை உருவாக்க ஜக்காத் என்னும் ஏழை வரியை இல்லாதோர்க்கு வழங்கி, மகிழ்ச்சியுடன் ரம்ஜான் பெருநாளை கொண்டாடும் இஸ்லாமிய சகோதர - சகோதரிகளுக்கு ரம்ஜான் பெருநாள் நல்வாழ்த்துகள். இப்பெருநாளில் அனைவரும் பிரார்த்தனை செய்வோம். அமைதியான உலகம் வேண்டும். அன்பான உலகம் வேண்டும்.

சமாதானமான உலகம் வேண்டும். ஏழ்மை இல்லாத உலகம் வேண்டும். போர் இல்லாத உலகம் வேண்டும். அனைவருக்கும் ரம்ஜான் பெருநாள் வாழ்த்துகள். நம் அனைவரின் மீதும் சாந்தியும், சமாதானமும் நின்று நிலவட்டுமாக. சமாதானமே சுக வாழ்வு!”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய பல் மருத்துவத் துறையில் பெரும் சீர்திருத்தம் தேசிய பல் மருத்துவ ஆணையம் அமலுக்கு வந்தது

தி கோவை ஹெரால்டு

இந்தியாவில் பல் மருத்துவக் கல்வி மற்றும் சிகிச்சை தரத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் மத்திய அரசு முக்கியமான மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, நீண்ட காலமாக செயல்பட்டு வந்த இந்திய பல் மருத்துவக் கவுன்சில் கலைக்கப்பட்டு, அதன் பதிலாக தேசிய பல் மருத்துவ ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அமைப்பு மார்ச் 19, 2026 முதல் அமலுக்கு வந்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதிய தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம் 2026 அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, இதுவரை நடைமுறையில் இருந்த பல் மருத்துவர்கள் சட்டம் 1948 ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்திய பல் மருத்துவக் கவுன்சிலின் அனைத்து அதிகாரங்களும் புதிய ஆணையத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

இந்த ஆணையத்தின் தலைவராக டாக்டர் சஞ்சய் திவாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆணையத்தின் செயல்பாடுகளை திறம்பட முன்னெடுக்க மூன்று முக்கிய தன்னாட்சி வாரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இளநிலை மற்றும் முதுநிலை பல் மருத்துவக் கல்வி வாரியம் கல்வித் தரம் மற்றும் பாடத்திட்டங்களை கண்காணிக்கும். பல் மருத்துவ மதிப்பீடு மற்றும் தரவரிசை வாரியம் கல்லூரிகளின் தரம் மற்றும் உள்கட்டமைப்பை ஆய்வு செய்து தரவரிசைப் படுத்தும்.

நெறிமுறைகள் மற்றும் பல் மருத்துவப் பதிவு வாரியம் மருத்துவர்களின் தொழில்முறை நடத்தைகள் மற்றும் பதிவுகளை பராமரிக்கும்.

மேலும், இந்த புதிய ஆணையம் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டண ஒழுங்குமுறையை உருவாக்குவதோடு, பல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மனிதவள மேம்பாட்டையும் ஊக்குவிக்கும்.

சமூக பல் மருத்துவ சேவைகளுக்கான தரநிலைகளை நிர்ணயித்து, கல்வி மற்றும் சிகிச்சை துறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதும் இதன் முக்கியப் பொறுப்புகளாகும்.

இந்த மாற்றம் மூலம், பழைய தேர்தல் அடிப்படையிலான அமைப்புக்கு பதிலாக தரம் மற்றும் பொறுப்புக்கூறல் மையமாகக் கொண்ட புதிய ஒழுங்குமுறை முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், குறைந்த செலவில் தரமான பல் மருத்துவ சேவைகள் கிடைப்பதோடு, இந்திய பல் மருத்துவக் கல்வி சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# வடகொரிய அதிபர் கிம் ஜாங்கை எதிர்த்த 0.07 சதவீத மக்கள்



வட கொரியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தலைவர் கிம் ஜாங் உன் தலைமையிலான ஆளும் கட்சி வேட்பாளர்கள் 99.93% வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்துள்ளனர். மொத்த வாக்குகளில் வெறும் 0.07% மட்டுமே எதிர்ப்பு வாக்குகளாக பதிவாகியுள்ளது. இந்த 0.07% எதிர்ப்பு வாக்குகள் 1957-ஆம் ஆண்டுக்குப் பிறகு வட கொரியாவில் பதிவாகியுள்ள முதல் எதிர்ப்பு வாக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 67 ஆண்டுகளாக எந்தத் தேர்தலிலும் எதிர்ப்பு வாக்குகள் பதிவாகியதில்லை என்று அரசு தரப்பு கூறி வந்தது. வட கொரியாவில் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக வேறு போட்டியாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே வாக்காளர்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த ஒரே வழி, வேட்பாளரின் பெயரை பேனாவால் அழித்து வாக்குச் சீட்டை சமர்ப்பிப்பதுதான்.

இதுவே “எதிர்ப்புவாக்கு” ஆக கணக்கிடப்படுகிறது. இந்த 0.07% எதிர்ப்பு வாக்குகள் வடகொரியாவின் அரசியல் அமைப்பில் மிக முக்கியமான மாற்றத்தைக் குறிக்கின்றன. ஆளும் கட்சிக்கு எதிரான மக்களின் மறைமுக அதிருப்தி இந்த எண்ணிக்கையில் வெளிப்பட்டுள்ளது. இருப்பினும், 99.93% ஆதரவு வாக்குகள் கிம் ஜாங் உன் தலைமையின் மீது மக்களுக்கு உள்ள ஆதரவு அல்லது அச்சத்தை வெளிப்படுத்துவதாக சர்வதேச ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

ஒட்டுமொத்தமாக, வட கொரியாவின் இந்தத் தேர்தல் முடிவு உலக அரங்கில் மீண்டும் விவாதத்தைத் தூண்டியுள்ளது. 0.07% எதிர்ப்பு வாக்குகள் என்ற சிறிய எண்ணிக்கை கூட, அங்கு மிகப்பெரிய அரசியல் மாற்றத்தின் அறிகுறியாக பார்க்கப்படுகிறது. கிம் ஜாங் உன் தலைமையின் கீழ் ஆளும் கட்சி மீண்டும் முழுமையான வெற்றியைப் பதிவு செய்துள்ளது என்றாலும், இந்த சிறிய எதிர்ப்பு வாக்குகள் அங்கு மறைந்திருக்கும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

## மர வேர் என நினைத்தால் அது ராட்சத பாம்புகள்: வைரல் வீடியோ அதிர்ச்சி

சமூகவலைதளங்களில் வேகமாக பரவி வரும் ஒரு வைரல் வீடியோ, இயற்கையின் மறைமுக ஆபத்துகளை வெளிப்படுத்தி பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மர வேர் போல தோன்றிய காட்சி, உண்மையில் ஒரு விஷமமான சூழ்நிலையை மறைத்து இருந்தது.



ஒரு மரத்தின் அடிப் பகுதியில் அடர்த்தியாகப் பரவி இருந்த வேர்களைப் போல ஒரு அமைப்பு காணப்பட்டது. அதை அங்கிருந்தவர்கள் முதலில் மரத்தின் இயல்பான பகுதியாகவே கருதினர். ஆனால், அருகில் இருந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கல்லை எறிந்தபோது உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

அது மர வேர் அல்ல, மாறாக மரத்தோடு ஒன்றிணைந்து மறைந்து கிடந்த ஒரு ராட்சத பாம்பு என்பது தெரியவந்தது. கல் பட்டவுடன் அந்தப் பாம்பு திடீரென சீறி நகரத் தொடங்கியது. இந்த எதிர்பாராத சம்பவம் அங்கிருந்தவர்களை பதறவைத்தது.

இந்த நிகழ்வு, இயற்கையோடு ஒன்றிணைந்து மறைந்து வாழும் உயிரினங்கள் எவ்வளவு அபாயகரமானவை என்பதை உணர்த்துகிறது. குறிப்பாக காடுகள் மற்றும் மரங்கள் அதிகம் உள்ள பகுதிகளில் செல்லும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். பாம்புகள் போன்ற உயிரினங்களைத் தூண்டாமல், பாதுகாப்பான தூரத்தை கடைப்பிடிப்பதே உயிர் பாதுகாப்புக்கான சிறந்த வழி என்பதை இந்த வீடியோ மீண்டும் நினைவூட்டுகிறது.

## கோவை-சென்னை இடையேயான இன்டர்சிட்டி ரயில்கள் மார்ச் 24 அன்று ரத்து

ஜோலார்பேட்டை சேலம் இடையேயான ரயில் பாதையில் பொறியியல் பணிகள் நடைபெறுவதால், கோவை சென்னை இடையேயான இன்டர்சிட்டி ரயில் சேவைகள் மார்ச் 24 அன்று முழுமையாக ரத்து செய்யப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, கோவையிலிருந்து காலை 6.20 மணிக்கு புறப்படும் கோவை சென்னை இன்டர்சிட்டி ரயில் (எண்: 12680) அந்த நாளில் இயக்கப்படாது.

அதேபோல், சென்னை இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்படும் சென்னை கோவை இன்டர்சிட்டி ரயில் (எண்: 12679) சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் மாற்று பயண ஏற்பாடுகளை செய்து கொள்ளவும், மேலதிக தகவல்களுக்கு ரயில்வே அறிவிப்புகளை கவனிக்கவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த ரத்து நடவடிக்கை, ரயில் பாதை மேம்பாட்டு பணிகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ரூ.409 கோடி மதிப்புள்ள நிலம் விவகாரம் டெல்லி யு.என்.ஐ அலுவலகத்துக்கு சீல்

தி கோவை ஹெரால்டு

டெல்லியிலுள்ள யு.என்.ஐ செய்தி ஏஜன்சி அலுவலகத்துக்கு போலீசார் சீல் வைத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியில் 9 ரஃபி மார்க் பகுதியில் யு.என்.ஐ செய்தி நிறுவனத்தின் அலுவலகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தை மேம்படுத்துவதற்காக, அரசு நிலம் ஒதுக்கியிருந்தது. அதாவது, வேறு சில நிறுவனங்களுடன் சேர்ந்து சுமார் 5,289.52 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் யு.என்.ஐ நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.




இதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.409 கோடி ஆகும். ஆனால், கடந்த 40 ஆண்டுகளாக இந்த அலுவலகத்தை மேம்படுத்திக்கட்ட யு.என்.ஐ நிறுவனம் தவறியுள்ளது. இதையடுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிலம் மற்றும் வீட்டு வசதி மேம்பாட்டு ஆணையம் (L&DO) பல முறை யு.என்.ஐ நிறுவனத்துக்கு நிபந்தனைகளை சுட்டிக் காட்டி கடிதம் எழுதியுள்ளது. ஆனால், எந்த மேம்பாட்டு நடவடிக்கையையும் யு.என்.ஐ நிறுவனம் மேற்கொள்ளவில்லை.

தொடர்ந்து, நிலம் மற்றும் வீட்டு வசதி மேம்பாட்டு ஆணையம் யு.என்.ஐ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட நில ஒதுக்கீட்டை கடந்த 2023-ம் ஆண்டு ரத்து செய்தது.

இதை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் யு.என்.ஐ நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. விசாரணையில், நிறுவனத்தில் நிலவும் நிதி பற்றாக்குறை காரணமாக, தங்களால் மேம்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ளமுடியவில்லை என்று யு.என்.ஐ தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், நீதிமன்றம் இந்த விவாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. யு.என்.ஐ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட நில ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது சரியானதே என்று கடந்த மார்ச் 19ம் தேதி தீர்ப்பளித்தது.

‘பலமுறை கால நீட்டிப்பு வழங்கப்பட்ட போதிலும், யு.என்.ஐ நிறுவனம் திட்டத்தை இறுதி செய்யவோ, இணை ஒதுக்கீட்டாளர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவோ அல்லது மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கவோ இல்லை. மேலும், அந்த நிறுவனம் நிதி சிக்கலில் இருப்பதையும் ஒப்புக் கொண்டுள்ளது. 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் கட்டிடத்தைக் கட்டத் தவறியதன் மூலம், நில ஒதுக்கீட்டு நிபந்தனைகளை மீறியுள்ளது ‘‘ என்று டெல்லி உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நேற்று டெல்லி போலீசார் டெல்லி யு.என்.ஐ அலுவலகத்துக்கு சீல் வைத்தனர். அப்போது, போலீசாருக்கும் பத்திகையாளர் களுக்குமிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதில், பெண் பத்திரிகையாளர் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவத்தை கண்டித்து யு.என்.ஐ நிறுவனத் தின் தற்போதைய உரிமையாளரான தி ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகை தனது எக்ஸ் பக்கத்தில் கண்டனத்தை பதிவு செய்துள்ளது. அதில், ‘பத்திகையாளர்கள் அலுவலகத்தில் தங்களுக்கு சொந்தமான பொருட்களை எடுக்க கூட போலீசார் நேரம் கொடுக்கவில்லை. பத்திரிகையாளர்களை தீவிரவாதிகள் போல போலீசார் நடத்தினர்.

இந்தியாவில் முன்பு எப்போதுமில்லாத அளவுக்கு பத்திரிகை சுதந்திரம் பாதிக்கப் பட்டுள்ளது’’ என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மிகப்பழமையான செய்தி ஏஜன்சி நிறுவனம் யு.என்.ஐ என்பது குறிப்பிடத்தக்கது.

# தோனி 7-ம் எண் ஜெர்சியில் இருந்து 8-க்கு மாறுகிறாரா?

## விவாதத்தை கிளப்பிய வீடியோ




திகோவை ஹெரால்டு

விளையாட்டு உலகில் நம்பர் 7 ஜெர்சி மிகவும் பாப்புலர். கால்பந்து உலகின் சூப்பர்ஸ்டார் கிறிஸ்டியானோ ரொனால்டோ நம்பர்7 ஜெர்சி அணிந்துதான் விளையாடுவார்.

இதனால், அவரை சி.ஆர்.7 என்று செல்லமாக அழைப்பார்கள். அதேபோல, இந்திய அணியின் முன்னாள் கேப்டனும், சென்னை அணியின் நம்பிக்கை நட்சத்திரமுமான' தல 'என்று செல்லமாக அழைக்கப்படும் தோனியும் நம்பர்7 எண் ஜெர்சி அணிந்துதான் விளையாடுவார்.

7என்றஎண்தோனியின் வாழ்க்கையுடன் பிண்ணி பிணைந்தது. ஏனென்றால், ஜூலை மாதம் 7ம் தேதி அவரதுபிறந்தநாள். இதன் காரணமாகவே, 7ம் எண் ஜெர்சியை தோனி தேர்வு செய்ததாகபலபேட்டிகளில் அவர் கூறியது உண்டு. கடந்த 2007ம் ஆண்டு டி20 உலகக் கோப்பை, 2007,2011ம் ஆண்டு50ஓவர் உலகக் கோப்பை,2013ம் ஆண்டுசாம்பியன்ஸ்டிராபி, சென்னை அணிக்காக வென்ற 5 ஐ.பி.எல் கோப்பைகளையும் நம்பர் 7 ஜெர்சி அணிந்துதான் தோனி வென்றிருந்தார்.

இந்த நிலையில், தோனியின் ஃபேஸ்புக் பக்கத்தில் நேற்று வீடியோ ஒன்று வெளியிடப்பட்டது. உடனடியாக, அந்தவீடியோ வைரலானது. அதில், '7ல் இருந்து8க்கு மாறுகிறேன். இதற்கு ஒரு காரணம் உள்ளது. ஏனென்றால், உலகம் தொடர்ந்து எதையாவது தேடி ஓடிக் கொண்டிருக்கிறது. நாம் குறைந்த நேரமே உறங்குகிறோம். கண்டிப்பாக, 8மணிநேரம் அமைதியான உறக்கம் அவசியம் 'என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வீடியோ இணையத்தில் விவாதத்தை கிளப்பியது. தோனி தனது ஜகானிக் 7வது நம்பர் ஜெர்சியில் இருந்து8க்கு மாறுகிறாரா? என்றுரசிகர்கள் விவாதிக்க தொடங்கியுள்ளனர். அதேவேளையில், 'நல்ல உறக்கம் தேவை 'என்பதற்கானவிழிப்புணர்வு விளம்பரம்தான் என்றும்சில ரசிகர்கள் கூறுகின்றனர்.

விளையாட்டு உலகில் ஜெர்சி மாறுவது என்பது சாதாரண விஷயமல்ல. ஒரு சில வீரர்கள் ஒரே அணிக்காக பல ஆண்டு காலம் விளையாடுவார்கள். பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும், வேறு அணிக்கு செல்ல மாட்டார்கள். இத்தாலி கால்பந்து அணியான ஏ.சி மிலனின் முன்னாள் கேப்டன் பாலோ மால்டினி 1984 ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை அந்த அணிக்காக மட்டுமே விளையாடினார். பல அணிகள் அவருக்கு சிவப்பு கம்பளம் விரித்த போதும், அணி மாறவில்லை. தனது வாழ்நாளில் கடைசி வரை ஏ.சி.மிலன் அணிக்காக மட்டுமே விளையாடி 2009ம் ஆண்டு ஓய்வு பெற்றார். மால்டினி ஓய்வு பெற்ற போது, ஏ.சி.மிலன் அணி அவர், அணிந்து விளையாடிய 3ம் எண் ஜெர்சிக்கும் நிரந்தர விடை கொடுத்தது. அதாவது, இனிமேல் ஏ.சி.மிலன் அணியில் வேறு எந்த வீரருக்கும் 3ம் எண் ஜெர்சி வழங்கப்படாது. ஜெர்சியில் இவ்வளவு விஷயங்கள் உள்ளன.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு சிறந்த மருத்துவமனை விருது

திகோவை ஹெரால்டு




ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட "தமிழ்நாட்டில் பல்துறை சுகாதார சேவையில் சிறந்த மருத்துவமனை" விருதினை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மற்றும் நிறுவன விவகாரங்கள் துறையின் இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ராவிடமிருந்து எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர்.சுந்தர் ராமகிருஷ்ணன் மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். அழகப்பன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கோவை ஸ்ரீ ராம கிருஷ்ணா மருத்துவமனை, டெல்லியில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில், "தமிழ்நாட்டில் பல்துறை சுகாதார சேவையில்சிறந்தமருத்துவமனை" என்ற பிரிவில் விருதைப் பெற்று, தரமான சுகாதார சேவைகளை வழங்கும் தனதுபயணத்தில் முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த விருதினை எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ்.அழகப்பன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்தவிருதினைமத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மற்றும் நிறுவன விவகாரங்கள் துறையின் இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா வழங்கினார்.

இந்த அங்கீகாரம், மருத்துவ சிறப்புத் திறன், நோயாளி மையப் படுத்தப்பட்ட சேவை மற்றும் நவீன மருத்துவ தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் மருத்துவமனையின் தொடர்ச்சியான அர்ப் பணிப்பைபிரதிபலிக்கிறது.

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின்நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமையில், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை பல்வேறு மருத்துவ தேவைகளை பூர்த்திசெய்யும் முன்னணி பல்துறை சுகாதார சேவை வழங்குநராக வளர்ச்சி பெற்றுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் சுந்தர் ராம கிருஷ்ணன், "இந்த அங்கீகாரம்எங்கள்மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் சொந்தமானது. உயர்ந்த தரமான சிகிச்சையை வழங்க ஓய்வின்றி உழைக்கும் எங்கள் குழுவின் அர்ப்பணிப்பிற்கான பாராட்டாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில், நவீன தொழில்நுட்பத்தையும் மனிதநேய சேவையையும் ஒருங்கிணைத்து, நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சை வழங்குவதே எங்கள் நோக்கம்.

தொடர்ந்து மேம்பட்டு, சுகாதாரத் துறையில் புதிய மைல்கற்களை அமைப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று தெரிவித்தார்.



கோவை கணபதி பகுதியில் வயது முதிர்ந்த வாக்காளர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் விருப்பப்படிவத்தினை நிரப்பும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவரும் தேர்தல் அலுவலருமான பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் வாணி ஜெகதாம்பாள்.

Olirum Kovai
An Initiative of Coimbatore City Development Trust (CCDT)
Roadside trash needs clearing? Burning garbage?
NAMMA KOVAI
Get your civic issues fixed through the Namma Kovai app.
Download on the App Store
GET IT ON Google Play
94663 95555 www.olirumkovai.com
LAKSHAKA TEX LLP

# சட்டவிரோத ஆன்லைன் சூதாட்ட தளங்களுக்கு அதிரடி 300 இணையதளங்கள் முடக்கம்

திகோவை ஹெரால்டு

இந்தியாவில் சட்ட விரோத ஆன்லைன் சூதாட்டம் மற்றும் பந்தய தளங்களுக்குஎதிராகமத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்துள்ளது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடியில் சுமார் 300 இணைய தளங்கள்மற்றும்செயலிகள் முடக்கப்பட்டுள்ளன. பொதுமக்களை பணமோசடி மற்றும் நிதி அபாயங்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை மொத்தம் 8,400க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான தளங்கள் முடக்கப் பட்டுள்ளன.

ஆன்லைன் விளையாட்டு சட்டம் அமலுக்கு வந்த பிறகு மட்டும்சுமார்4,900தளங்கள் நீக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு பந்தய தளங்கள், ஆன்லைன் கேசினோவிளையாட்டுகள், சட்டா மற்றும் மட்கா வலைப்பின்னல்கள் போன்ற சட்டவிரோத தளங்கள் இந்த நடவடிக்கையின் கீழ் குறிவைக்கப்பட்டுள்ளன. இத்தகையதளங்கள் அதிக பணம் தருவதாக கூறி மக்களை ஏமாற்றுகின்றன.


இந்த தளங்கள் பணமோசடி மற்றும் இணைய குற்றச்செயல்களுக்கு வழிவகுப்பதுடன், இளைஞர்களிடையே தீய பழக்கங்களையும் உருவாக்குகின்றன.

பல தளங்கள் வெளிநாடுகளில் இருந்து இயங்குவதால் அவற்றை கட்டுப்படுத்துவதுசவாலாக உள்ளது.

எனவே, இத்தகைய தளங்களின் அணுகலைத் துண்டித்து மக்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அங்கீகரிக்கப்படாத தளங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான தளங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க இதை செய்யுங்கள்

திகோவை ஹெரால்டு




நமது அன்றாக பரபரப்பான வாழ்க்கையில் உடல்நலனுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. எனினும், சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கநமது அன்றாட வாழ்க்கை முறையில் மாற்றங்கள், உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை செய்ய வேண்டும்.

நம்மில் சிலர் ஒரு நாளைக்குஅரை லிட்டர் தண்ணீர் கூட குடிப்பது இல்லை. இது சிறுநீரக ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. சிறுநீரகங்கள் உடலில்இருந்துநச்சுகளை வெளியேற்றஒருநாளைக்கு குறைந்தது3லிட்டர்தண்ணீராவது குடிக்க வேண்டும்.

உங்களுக்கு ரத்த அழுத்தப் பிரச்சனை இருந்தால் உணவில் உப்பின்அளவைக்குறைக்க வேண்டும். உயர் ரத்த அழுத்தம்என்பதுசிறுநீரகப் பிரச்சனைக்குமுக்கியமான காரணங்களில் ஒன்றாக உள்ளது. பதப்படுத்தப்பட்ட, துரித உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எண்ணெய் அதிகம் தேவைப்படும் உணவுகள், உப்பு அதிகமுள்ள உணவுகளை கண்டிப்பாக தவிர்த்துவிட வேண்டும்.

உங்களுக்குரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக இருந்தால், அது சிறுநீரக பாதிப்பு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். ஆகவே, உங்கள் ரத்த சர்க்கரை அளவை தொடர்ந்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ரத்த சர்க்கரை அளவை சீராக பராமரிக்க அதற்கு ஏற்ற உணவுக் கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும்.

சிறுநீரகத்தையும், ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தையும் பராமரிக்க விரும்பினால் தினமும் குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி இல்லை என்றால் 30 நிமிடங்கள் வரை வியர்க்க விறுவிறுக்க நடைபயிற்சி செய்யலாம். யோகா, சைக்கிள் ஓட்டுதலை செய்யலாம். இது உங்கள் எடையைக் கட்டுக்குள் வைத்திருப்பதோடு, உங்கள் ரத்த அழுத்தத்தையும்இயல்பாக வைத்திருக்கும். இது உங்கள் சிறுநீரகங்களை ஆரோக்கியமாகஇருப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மது அருந்துதல், புகைப் பழக்கம் ஆகியவை உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பதோடு சிறுநீரகத்தின்செயல்பாட்டினை மிகவும் மோசமாக்கும். ஆகவே, இந்த இரு பழக்கங்களையும் கைவிட்டு விடுங்கள். 6மாதங்களுக்கு ஒருமுறை அத்தியாவசிய ரத்த பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அதாவது, ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் சிறுநீரக செயல்பாட்டு சோதனையை மேற்கொள்ள வேண்டும். இது சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தை தெரிந்துகொள்ள உதவுகிறது. தொடர்ந்து வயிற்றுவலி அல்லதுமுதுகு வலி அல்லது சிறுநீர் கழிப்பதில் சிரமம் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.



# அதிமுக ஆட்சியில் பெண்களுக்கு 89 ஆயிரம் கோடி கடன் உதவி வழங்கப்பட்டது

## மகளிர் தின விழாவில் எஸ்.பி.வேலுமணி பேச்சு

தி கோவை ஹெரால்டு

கோவைபச்சாபாளையத்தில் தொண்டாமுத்தூர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மதுமதி விஜயகுமார் தலைமையில் மகளிர் தின விழா நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் கார்த்திகா பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட இணைச்செயலாளர் எஸ்.மணிமேகலை, முன்னிலை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ். மகேஸ்வரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். விழாவை வி.வித்யா வேலுமணி, எஸ்.ஏ.ஹேமலதா அன்பரசன், தீக் ஷனா விஜய் விகாஸ் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். 10 ஆயிரம் பெண்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் கேக் வெட்டி, அனைவருக்கும் வழங்கப்பட்டது. விழாவை முன்னிட்டு தனமணி வெங்கட்டின் சிறப்பு நகைச்சுவை பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் எஸ்பி. வேலுமணி , நல்லறம் அறக்கட்டளை தலைவர் எஸ்பி.அன்பரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

சாதனை பெண்கள் மினி, கவிதா, கல்பனா, திலகவதி, அபர்ணா ராம் ஆகியோர் விழாவில் சிற்றுரை ஆற்றினர். கொள்கை பரப்பு இணைச் செயலாளர் விந்தியா மற்றும் கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் நடிகை கௌதமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

விழாவில், முன்னாள் அமைச்சர் எஸ்பி. வேலுமணி பேசுகையில், "அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள். இங்குள்ள அனைவருமே எனது குடும்பத்தினர் தான். தொண்டாமுத்தூர் தொகுதியை பொறுத்தவரை என்னை தொடர்ந்து வெற்றிபெறச் செய்து வருகிறீர்கள். தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறீர்கள். திமுக என்ன விளம்பரம் செய்தாலும் வெற்றி பெற முடியாது திமுக விளம்பரத்தில் மட்டும்தான் ஆட்சி செய்கிறது. ஐந்து வருடங்களாக திமுக எதுவும் செய்யவில்லை. எந்தத் திட்டமும் தரவில்லை. கழக ஆட்சி காலத்திட்டங்களை முடக்கிவிட்டது. இங்குள்ள ஒவ்வொருவரும் தலா 10 வாக்குகளை பெற்றுத் தாருங்கள். பெண்கள் நினைத்தால் செய்ய முடியாதது எதுமே இல்லை. அனைத்துமே உங்களிடம் தான் உள்ளது.

சிறப்பான முறையில் பணியாற்றுகிறீர்கள். மகளிர் இணைந்து மிகப்பெரிய மாநாட்டை நடத்தி விட்டீர்கள். மகளிர் சுய உதவி குழுவிற்கு அதிக கடன் வழங்கியது ஆட்சி ஆட்சிக்காலத்தில்தான். இதனால் ஏராளமானோர் தொழில் முனைவர் ஆனார்கள். முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்காலத்தில் 89 ஆயிரம் கோடி கடன் உதவியாக வழங்கப்பட்டது." இவ்வாறு அவர் பேசினார்.

இறுதியில், குனியமுத்தூர் மகளிர் அணி செயலாளர் கிளி என்கிற சகிலா பேகம் நன்றி கூறினார்.

விழாவில் நிர்வாகிகள் என்.கே.செல்வதுரை, என்.எஸ். கருப்புசாமி, ஜிகே.விஜயகுமார், மாணவரணி செயலாளர் சிங்கை ஜி.ராமச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் டிபி.வேலுசாமி, ராஜா (எ) ராமமூர்த்தி, டி.சக்திவேல், நகர செயலாளர் கே.சண்முகராஜா, பாசறை ராஜேஷ், பகுதி செயலாளர் மதனகோபால், ஐ.டி. விங் சசிகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.





## கர்ப்பமான நீர்யானை தாக்கியதில் இளம் பெண் டாக்டர் பலி!

கர்நாடக மாநிலத்தில் நீர்யானை தாக்கியதில் இளம் பெண் கால்நடை டாக்டர் பலியானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் ஷிமோகோவாவில் தேவரகொப்பா வன உயிரின பூங்கா உள்ளது. இங்கு, பெங்களூருவைச் சேர்ந்த இளம் கால்நடை மருத்துவரான சமீக் ஷா ரெட்டி (27) என்பவர் பணியாற்றி வந்தார். இந்த பூங்காவில் நீர் யானை ஒன்று கர்ப்பமாக இருந்தது. கடந்த வியாழக்கிழமை 11.30 மணியளவில் அந்த நீர்யானையின் உடல்நிலையை பரிசோதிக்க சமீக் ஷா ரெட்டி சென்றார். தெர்மல் கேமரா மூலம் நீர்யானையின் உடல் வெப்பத்தை பரிசோதித்துக் கொண்டிருந்தார். அப்போது, ஆக்ரோஷமடைந்த நீர்யானை, சமிக் ஷா முட்டித் தள்ளி பலமாக தாக்கியது . இதில்,பலத்த காயமடைந்த அவரை அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. எனினும், சிகிச்சை பலனளிக்காமல் வெள்ளிகிழமை காலை சமீக் ஷா பரிதாபமாக உயிரிழந்தார்.

சமீக் ஷா மறைவுக்கு கர்நாடகவனத்துறை அமைச்சர் ஈஸ்வர் காண்ட்ரே இரங்கல் தெரிவித்துள்ளார். "ஒவ்வொரு உயிரும் விலை மதிப்பற்றது. இந்த துயரமான சமயத்தில் சமிக் ஷாவின் பெற்றோருக்கு நாங்கள் ஆறுதலாக இருப்போம். தேவையான இழப்பீடு வழங்கப்படும். வனவிலங்குகளுக்கு சிகிச்சையளிக்கும் போது, முறையான பாதுகாப்பு அம்சங்களை ஊழியர்கள் நிச்சயம் கடைபிடிக்க வேண்டும். சம்பவம் குறித்து விசாரணை நடத்தி, 7 நாட்களுக்கு அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்" என்று அவர் கூறியுள்ளார்.

சமீக் ஷா ரெட்டி, ஒப்பந்த அடிப்படையில் இந்த வன உயிரியல் பூங்காவில் பணியாற்றி வந்தார்.

### பாஜகவின் நம்பிக்கை நட்சத்திரம்

## எம்.எல்.ஏ. கனவுடன் களம் இறங்கிய வீட்டுபணிப்பெண்!

மேற்கு வங்கத்தில் வீட்டு வேலைக்கு செல்லும் பெண் ஒருவர் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மீண்டும் வேட்பாளராக களம் இறக்கப்பட்டுள்ளார். இவரது, மாத வருமானம் 4 ஆயிரம் மட்டுமே.

மேற்கு வங்கத்தில் கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் தனித் தொகுதியான ஆஸ்கிராமில் கலீதா மாஜி என்ற பெண் பாரதிய ஜனதா கட்சி சார்பில் வேட்பாளராக மீண்டும் களம் இறக்கப்பட்டுள்ளார். கடந்த 2021ம் ஆண்டு தேர்தலிலும் இவர் போட்டியிட்டார். அந்த தேர்தலில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அபதானந்த தண்டரிடம் 11,815 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். எனினும், இந்த முறை கண்டிப்பாக வெற்றி பெறுவேன் என்று கலீதா மாஜி நம்பிக்கையுடன் கூறுகிறார்.



காலையில் தனது வீட்டு வேலைகளை முடித்து விட்டு, மேலும் இருவீடுகளுக்குச் சென்று பணிப்பெண் வேலைகளை பார்க்கிறார். அந்த பணி முடிந்ததும், மதியத்தில் இருந்து வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார். தொகுதி முழுவதுமுள்ள வீடுகளுக்கு நேரடியாக சென்று விடுகிறார். தொகுதியில் ஒவ்வொரு மக்களிடமும் நேரடியாக கலந்துரையாடுகிறார். கலீதா மாஜியின் பலமே அவரின் எளிமைதான். கலீதாவுக்கு அவரது குடும்பத்தினரும் உறுதுணையாக உள்ளனர். இதனால், அவரால் தீவிர அரசியலில் ஈடுபட முடிகிறது.

கடந்த 2014ம் ஆண்டு முதல் அரசியலில் ஈடுபட்டு வருகிறார். அவரின் பணிகளை கண்டுவியந்த கட்சித்தலைமை படிப்படியாக அவருக்கு பொறுப்புகளை வழங்கியது. தற்போது , கிழக்கு பர்தான் மாவட்ட பாரதிய ஜனதா கட்சி கமிட்டி உறுப்பினராக உள்ளார். கலீதா ஜீயா பல முறை மிரட்டல்களுக்குள்ளாகியுள்ளார். ஆனால், ஒரு போதும் கட்சிப்பணியில் அவர் சுணக்கம் காட்டியதில்லை.

## கறுப்பாக இருப்பதால்... பகீர் கிளப்பிய வர்ணணையாளர் சிவராமகிருஷ்ணன்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் 1983 முதல் 1987ஆம் ஆண்டு வரையிலும் இந்திய அணிக்காக 9 டெஸ்ட் மற்றும் 16 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். 41 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். ஓய்வு பிறகு அவர் தொலைக்காட்சியில் வர்ணனையாளராகவும் பணியாற்றினார்.

பிசிசிஐ அமைப்பின் அதிகாரப்பூர்வ வர்ணனையாளராக 20 ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில், அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் திடீரென்று பிசிசிஐ வர்ணனையாளர் குழுவிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதற்கு, அவர் கூறிய காரணம்தான் பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளது.

அந்த பதிவில் "எனது 23 ஆண்டுகால கடின உழைப்பிற்குப் பிறகும், டாஸ் போடு போதும், பரிசளிப்பு விழாக்களில் வர்ணனை செய்ய எனக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

புதியதாக வந்தவர்களுக்கு பிட்ச் ரிப்போர்ட் மற்றும் டாஸ் நிகழ்வுகளில் வர்ணனை செய்ய வாய்ப்பு வழங்குகிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? என் நிறத்தின் காரணமாகவே நான் வர்ணனையாளர் குழுவில் ஓரங்கட்டப்படுகிறேன்.

அதேவேளையில், எனது சுயமரியாதையை விட்டுக் கொடுத்து இந்தப் பணியைத் தொடர விரும்பவில்லை" என்று கூறியுள்ளார்.

மற்றொரு பதிவில் "பிசிசிஐ-யின் நிர்வாகிகள் மீது எனக்கு எந்த வருத்தம் இல்லை . வர்ணனைக்கான இடங்களை முடிவு செய்யும் குழுவில் உள்ள சில அதிகாரிகளே பாகுபாட்டுக்கு காரணம்" என்றும் கூறியுள்ளார்.

## மோனலிசாவுக்கு 16 வயதுதான் ஆகிறதாம்... வெடித்த சர்ச்சை

மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரைச் சேர்ந்த மோனலிசா போஸ்லே என்ற இளம் பெண் உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடந்த கும்பமேளாவில் பாசிமணி விற்பனை செய்தபோது தனது வசீகர புன்னகையாலும், காந்த கண்களாலும் இந்தியா முழுவதும் பாப்புலரனார். இதன், காரணமாக அவருக்கு பட வாய்ப்புகள் வந்தன. கேரளாவில் தங்க நகை கடை திறப்பு விழாவிலும் கலந்து கொண்டார். வருமானமும் பல மடங்கு உயர்ந்தது.

மோனலிசா போஸ்லேயும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த முகமது ஃபர்மான் என்பவருக்கும் ஃபேஸ்புக் வழியாக காதல் மலர்ந்தது. கடந்த 6 மாத காலமாக காதலித்து வந்துள்ளனர். ஆனால், இவர்களின் காதலுக்கு குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மோனலிசாவை



உறவினரான இளைஞர் ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர்.

இதற்கிடையே , சினிமா படப்பிடிப்புக்காக திருவனந்தபுரம் சென்ற மோனலிசா, குடும்பத்தினர் தங்கள் காதலை எதிர்ப்பதாக கூறி, தனது காதலருடன் தம்பானூர் காவல் நிலையத்தில் தஞ்சமடைந்தார். பெற்றோர் தன்னை வேறு ஒருவரை திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்துவதாக தம்பானூர் போலீசாரிடம் மோனலிசா தெரிவித்திருந்தார். புகாரின் அடிப்படையில், தம்பனூர் போலீசார் அவரது தந்தை ஜெய்சிங் போஸ்லேவை வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். மேஜர் என்பதால் மோனலிசா எடுப்பதுதான் முடிவு என்று தந்தையிடம் போலீசார் தெரிவித்தனர். மோனலிசா தனது காதலரை திருமணம் செய்வதில் உறுதியாக இருந்ததால், அவரின் தந்தையும் போலீஸ் நிலையத்தில் இருந்து வெளியேறினார். பின்னர், 'இது லவ்ஜிகாத் இல்லை ;உண்மையான காதல் 'என்றும் மோனலிசா விளக்கமளித்திருந்தார்.

கடந்த மார்ச் மாதம் 11ம் தேதி திருவனந்தபுரம் அருமானூர் கோயிலில் மோனலிசாவுக்கும் முகமது ஃபர்மானுக்கும் கேரள அரசியல் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது.

இந்த நிலையில், மத்திய பிரதேச மாநில விஷ்வ இந்து பரிஷத் அமைப்பின் செயலாளர் அனில் விலாயில் என்பவர் மோனலிசாவின் பிறப்பு சான்றிதழை வெளியிட்டுள்ளார். கடந்த 2009ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி மோனலிசா பிறந்துள்ளார். அதன்படி 16 ஆண்டுகள் 2 மாதம் மட்டுமே ஆகிறது.

மோனலிசா 'மைனர்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து, மத்திய பிரதேச மாநில டி.ஜி. பியிடம் அனில் புகாளித்துள்ளார்.

## இந்த வார டிரெண்டிங் மீம்




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)